

# புறஜாதிகளுக்கு ஒரு தீர்க்கதரிசி

## A PROPHET FOR GENTILES

வில்லியம் மரியன் பிரான்ஹாம்

# புறஜாதிகளுக்கு ஒரு தீர்க்கதரிசி

## முதலாம் அத்தியாயம்

ஒரு முறை சீஷர்கள் இயேசுவிடம், 'உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன'? (மத் 24:3) என்று கேட்டபோது, அவர் அக்காலம் முதல் முடிவுகாலம் வரைக்கும் நிகழவிருக்கும் சம்பவங்களைக் குறித்து நீண்ட வியாக்கியானம் ஒன்றை விடையாக அளித்து, அத்திமரத்தின் அடையாளத்துடன் (மத் 24:88) அதை முடித்தார்.

அத்திமரம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு உவமையாயுள்ளதென்றும், அவருடைய இரண்டாம் வருகைக்கென தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு விழிப்புணர்ச்சி அளிக்க, உலக முடிவின் போது இது முத்கியமான அடையாளமாகத் திகழுமென்று இயேசு சுட்டிக் காட்டினார் என்னும் விஷயத்திலும் வேத மாணாக்கரிடையே எவ்வித வேறுபாடும் இல்லை. மேலும் லூக்கா 87:28ல் அவர் கூறின வார்த்தைகள் இதை ஆமோதிக்கின்றது.

“பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல பபுறஜாதிக்குள்ளும் சிறைப்பட்டுப் மோவார்கள், புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்.” இஸ்ர வேலருக்கு புறஜாதிகளிடமிருந்த நிலையை மாற்றி அமைக்கும் இத்தீர்க்கதரிசனம், இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவு பெற்ற முதற்கொண்டு நிறைவேறி வருகின்றது. இஸ்ரவேல் ஜனங்கள், அதிக துன்பங்கள் அனுபவித்த பின்பு, ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஒன்று சேர்க்கப்பட்டு, அவர்களுடைய பிறப்புரிமையான நாட்டிற்கு திரும்பினர். அப்பொழுது தான் நாடு திரும்பி எத்தனையோ கடினமான இடையூறுகளை மேற்கொள்ள வேண்டியிருந்த அந்த மிகச் சிறிய தேசம், தொடர்ச்சியாக யுத்தங்களை வென்று, மத்திய கிழக்கிலேயே மிகப் பலம் கொண்ட இராணுவத்தை பெற்றுள்ள தேசமாகத் திகழ்ந்து, முழு உலகத்தையும் திகைப்பில் ஆழ்த்தியது.

உலகத்தின் முடிவைக் குறித்தும், கிறிஸ்து தமது மணவாட்டிக்காக வருதலைக் குறித்தும் முன்னுரைக்கப்பட்ட அடையாளம் இது ஒன்று மாத்திரமல்ல, உண்மையில் இதன் தொடர்பாக உரைக்கப்பட்ட

என்னை முன்னிட்டு ஆணையிடும் என்று நான் என்னைக் கொண்டே ஆணையிட்டிருக்கிறேன்; இந்த நீதியான வார்த்தை என் வாயிலிருந்து புறப்பட்டது; இது மாறுவது இல்லையென்கிறார்.''

பிலிப்பியர் 2: 10-11, "இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும் படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்."

விசுவாசி, குமாரனுடைய முகத்தை மகிமையில் காணவாஞ் சிக்கிறான். அவன் இயேசுவின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து பணியும்போது, யேகோவாவின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்திருப்பான்- அவனுடைய தேவனும் அவனுடைய இரட்சகருமானவர்!

## செய்தி

தமது தீர்க்கதரிசியின் மூலம் தேவன் அனுப்பின இந்த "செய்தி" உங்கள் வாழ்க்கையை மாற்றி, தேவனுடைய வார்த்தை உங்களிடம் உயிர் பெற்று வரச் செய்யக்கூடும்.

பவுல் பெரோயா பட்டணத்தாரைக் குறித்து இவ்வாறு கூறினான்: "அந்த பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தனால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்," (அப்.17:11).

இச்செய்தியை எடுத்து, ஆராய்ந்து பார்த்து, வேதவாக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். கர்த்தர் தாமே தம்மை உங்களுக்கு வெளிப்படுத்தி தருவாராக.

டெர்ரி ஸ்ப்ருல்

**(Terry Sproule)**

b) "தேவனாகிய பிதா" ஆவியாயிருக்கிறார். எனவே அவர் அதரிசனமானவர் (கொலோ. 1:15, 1 திமோ, 1:17).

ஸ்தேவான் இரண்டு தேவர்களைக் காணவில்லை. அவன், "இயேசு தேவனுடைய பக்கத்தில் நிற்பதைக் காண்கிறேன்'' என்றும் கூறவில்லை. "தேவனுடைய வலது பாரிசம்" (Right hand of God - தேவனுடைய வலது கரம் - தமிழாக்கியோன்) என்னும் சொல் இதன் விவரணத்திற்கு திறவுகோலாய் உள்ளது. யாத் 15:6ல் மோசேயும் இஸ்ரவேல் ஜனங்களும் தேவனுடைய வலது கரத்தைக் கண்டதாக உரிமை கோரினர். அவர்கள் உண்மையில் கண்டது தேவனுடைய வல்லமையும் மகிமையுமே. இஸ்ரவேலனாகிய ஸ்தேவானுக்கு ''வலதுகரம்" என்றால் என்னவென்று தெரியும். அவன் தேவனுடைய குமாரனை 'தேவனுடைய வலது கரத்தில் (வலதுபாரிசத்தில்) கண்டான். யோவான் 10:30, நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்.

ஒரே தேவன் ஒரே நாமத்தைக் கொண்டவராய் இருக்கிறார் என்னும் வெளிப்பாட்டின் மகத்துவத்தில் ஒரு விசுவாசி இளைப்பாறத் தொடங்கும்போது, அவனுடைய இருதயத்தில் எவ்வளவு முழுமையான தெளிவும் உறுதியும் ஏற்படுகின்றது!

ஒரு விசுவாசி பிதாவாகிய இயேசுகிறிஸ்துவை நினைக்கும் போது, எவ்வித போட்டியுமன்றி, அவரைத் தவிர வேறொருவருமில்லாத உயர்ந்த தேவனை நினைக்கிறான்.

அவன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை நினைக்கும் போது, பிதா வாசம் செய்த மாம்ச சரீரத்தையும், அதன் மூலம் அவர் மீட்பின் திட்டத்தை மானிடருக்காக நிறைவேற்றினதையும் நினைக்கிறான். பாடுப்பட்டு மரித்து, இப்பொழுது பிரதான ஆசாரியராக அவனுக்காக பரிந்து பேசும் மனிதனை அவன் நினைக்கிறான்.

அவன் பரிசுத்த ஆவியாகிய இயேசுகிறிஸ்துவை நினைக்கும் போது அவனுக்குள் இப்பொழுது வாசம் செய்து கொண்டிருக்கும் பிதாவின் ஆவியை நினைக்கிறான். தேவன் - தேவனின் எல்லாமே சபைக்குள் வாசம் செய்யும்படியாக வந்து, அதை பரிபூரணத்திற்கு வழி நடத்திக் கொண்டிருக்கிறது என்று அவன் அறிந்திருக்கிறான். ஏசாயாவின் வார்த்தைகளும் பவுலின் வார்த்தைகளும் எவ்வாறு இணையாக அமைந்து யேகோவாவும் இயேசு கிறிஸ்துவும் இருவரல்ல, ஆனால் மகிமையுள்ள ஒருவரே என்பதை நிருபிக்கின்றன என்று கவனியுங்கள்.

ஏசாயா 45: 21-28, "நீங்கள் தெரிவிகதும்படி சேர்ந்து. ஏகமாய் யோசனை பண்ணுங்கள்: இதை பூர்வகால முதற் கொண்டு விளங்கப்பண்ணி, அந்நாள் துவக்கி இதை அறிவித்தவர் யார்? கர்த்தராகிய நான் நான் அல்லவோ? நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை: என்னைத் தவிர வேறெவரும் இல்லை. பூமியின் எல்லையெங்முள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறெவரும் இல்லை. முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும். நாவு யாவும்



தீர்க்கதரிசனங்களின் பட்டியல் நீளமானது. அறிவு பெருகிப் போதல், நோவா, லோத்து ஆகியவர்களின் நாட்களை ஒத்த நாட்கள்; அந்திக்கிறிஸ்து எழும்புதல், உலக பொருளாதார நிலை செழிப்படைதல், யுத்தங்கள், பூமியதிர்ச்சிகள் போன்றவை இப்பட்டியலில் இடம் பெறுகின்றன. தற்காலங்களில் இத்தீர்க்கதரிசனங்கள் தத்ரூபமாக நிறைவேறுதல், கொந்தளிப்பான நிலை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்லுதல், உலகம் அந்நிலையில் தத்தளித்துக் கொண்டிருத்தல் போன்றவை, அறிவியல் நிபுணர்கள், பொருளாதார நிபுணர்கள், அரசியல்வாதிகள், மனோதத்துவ மேதைகள், வேத பண்டிதர்கள் இவர்களை, அழிவு சமீபமாயுள்ளது என்பதை சந்தேகமின்றி நம்பச் செய்துள்ளன.

## தீர்க்கதரிசியின் அடையாளம்

இச்சிறு புத்தகத்தின் நோக்கம் யாதெனில், இன்னும் ஒரு அதிமுக்கிய அடையாளம் மற்ற அடையாளங்களைப் போலவே, நமது காலத்தில் நிறைவேறியுள்ளது என்பதன் உண்மையைக் கூறி வாசகர்களை எச்சரிப்பூட்டி விழிப்புடன் இருக்கச் செயவதற்காகவே (Alert) ஆகும். வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒரு முக்கியமான சம்பவம் நிகழும் முன்பு, தேவன் ஓர் அடையாளத்தை அனுப்புவது வழக்கம். அவ்வகையில், இவ்வடையாளம் இணையற்றது. ஆனால் இதிலுள்ள முரண்பாடு என்னவெனில், தேவனுடைய மிகத் தெளிவான இந்த அடையாளம் அசட்டை பண்ணப்பட்டு, தவறாக புரிந்து கொள்ளப்பட்ட ஒன்றாக அமைந்திருப்பது தான். ஆமோஸ் 3:7ல் அவன் உரைத்துள்ள இக்குறிப்பான பிரகடனத்தைக் கவனியுங்கள்: “கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம் முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத் தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.” தேவன் தமது ஜனங்களுடன் தொடர்பு கொள்ளும் முறையில், இத்தீர்க்கதரிசிகளை அனுப்புதல் எப்பொழுதுமே அடங்கியுள்ளது. ஒரு முன்னோடியாகிய தீர்க்கதரிசி இல்லாமல் தேவன் “ஒரு காரியத்தையும் செய்யார்” என்று ஆமோஸ் திட்டவட்டமாகக் கூறுகின்றான். வேத சரித்திரத்தை மேற்பரப்பில் படிப்பவர்க்கும் கூட இது உண்மை என்று புலனாகும்.

ஆனால் வருத்தமான காரியம் என்னவெனில், சந்தேகத்தோடும் வசைச் சொற்களோடும் வரவேற்கப்படாத தீர்க்கதரிசி ஒருவரும் இல்லையென சரித்திரம் எடுத்துக் காட்டுகிறது. தேவன் அவர்களை எவ்வளவாக உறுதிப்படுத்தன போதிலும் அவர்கள் யாரிடம் அனுப்பப்பட்டனரோ, அவர்களால் அவர்கள் துன்புறுத்தப்பட்டனர்.

இதை இயேசு பரிசேயர்களிடம் மத்தேயு 29:37-36ல் குறிப்பிட்டார். அவர்களும் அவர்களுடைய முற்பிதாக்களும், ஆபேல் முதல் சகரியா வரைக்கும் இருந்த "எல்லா" தீர்க்கதரிசிகளின் இரத்தப் பழியையும் தங்கள் மேல் சுமந்திருந்ததாக அவர் கூறினார்.

இந்த படிப்பில், தேவன் தம்து தெய்வீக தொடர்ச்சியை நிலை நாட்டிக் கொண்டே வந்து, அவருடைய இரண்டாம் வருகையை அறிவிக்க ஒரு தீர்க்கதரிசி தூதனை அனுப்ப வாக்களித்துள்ளார் என்பதை நாங்கள்: விளக்க முயல்வோம், இந்நூற்றாண்டில் ஒரே ஒரு ஊழியம் மாத்திரமே அந்த தூதனாயிருக்க தகுதி பெற்றுள்ளது என்பதை நாங்கள் காண்பிப்போம். வில்லியம் பிரான்ஹாம் என்பவர் தேவனால் உறுதிப்படுத்தப்பட்டு, அவருடைய காலத்தில் வாழ்ந்தவர்களால் ஒரு முக்கிய தீர்க்கதரிசியாக (Major Prophet) அங்கேரிக்கப்பட்டாரென்றும், அப்படியிருந்தும் நிலையற்ற, அகந்தை கொண்ட லவோதிக்கேயா சந்ததியாரால் அவர் புறக்கணிக்கப்பட்டாரென்றும் தாக்கல் காண்பிப்போம்.

## வேதவாக்கியங்கள் என்ன கூறுகின்றன

வில்லியம் பிரான்ஹாமின் வாழ்க்கையையும். ஊழியத்தையும் குறித்து நாம் சிந்திப்பதற்கு முன்பு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு ஒரு தீர்க்கதரிசி முன்னோடியாக வரவேண்டும் என்பதை அறிவுறுத்தும் சில வேதவாக்கியங்களை நாங்கள் ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துரைப்போம். இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்குப் பின்னர், ஜனங்களுக்கு ஊழியம் செய்ய தேவன் தீர்க்கதரிசிகளை உபயோகித்ததேயில்லை என்னும் கருத்து எங்கும் நிலவியுள்ளது. இதற்கு ஆதாரமாக, சில வேத வாக்கியங்கள் மாமிசப்பிரகாரமாக வியாக்கியானம் செய்யப் படுகின்றன. உதாரணமாக, லூக்கா 16:16, ''நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் (தர்க்கததரிசிகளும்) யோவான் வரைக்கும் (ஆங்கிலத்தில், "The Law and The Prophets were until John...); எபி 1:1, பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்'" போன்ற வசனங்கள் அதை நிரூபிக்க உபயோகிக்கப் படுகின்றன. தீர்க்கதரிசிகள் அனுப்பப்படாமல் நிறுத்தப்பட்டு விட்டனர் என்பதை இவ்வேதவாக்கியங்கள் சுட்டிக் காண்பிக்கவில்லை என்று நாம் தெளிவாக அறிந்து கொள்ளுதல் அவசியம். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசி ஒவ்வொருவரும் உரைத்த வார்த்தையாக லோகாஸாக



## 7. யோவான் 17:5, "உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே"

தேவனுடைய முன்னறிதல் (foreknowledge) என்பதைக் கொண்டு இவ்வசனத்தை நாம் புரிந்து கொண்டால், மகிமை பொருந்திய குமாரன் ஒருவர் முன்பே இருந்தார் என்று இதை வியாக்கியானம் செய்ய முடியாது. அவ்வாறு வியாக்கியானம் செய்தல் என்பது, காலத்தோடும் மானிடத்தன்மையோடும் குமாரனை சம்பந்தப்படுத்தி கூறப்பட்டுள்ள வேதவசனங்களை முரண்படுத்தி விடும்.

ஆயினும், உலகம் உண்டாகிறதற்கு முன்பே இயேசு மகிமைப்பட்டிருந்தார், உலகம் உண்டாகிறதற்கு முன்பே அவர் ஆட்டுக்குட்டியானவராயிருந்தார், உலகத்தோற்றத்துக்கு முன்பே அவர் அடிக்கப்பட்டார் (வெளி. 13:8)

கிறிஸ்துவின் மீட்பின் கிரியை உட்பட இரட்சிப்பின் முழுதிட்டமும் நித்திய காலமாக தேவனுடைய சிந்தையிலிருந்தது. இந்த மகிமையைக் குறித்துதான் இயேசு யோவான் 17:5ல் ஜெபம் செய்தார்.

நாமும் கூட, மீட்கப்பட்ட தேவனுடைய புத்திரர் என்னும் நிலையில், ஏற்கனவே மகிமைப்பட்ட தேவனுடைய புத்திரர் என்னும் நிலையில், ஏற்கனவே மகிமைப்பட்டு விட்டோம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். ரோமர் 8:29-30 ஐ வாசியுங்கள்: 'தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார், எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்."

நாம் மகிமைப்படுத்தப்பட்டோம். ஏனெனில் நாம் மகிமைப்பட வேண்டுமென்று தேவனுடைய சிந்தையில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. நாமும் கூட இயேசு வைப் போல், "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே என்னை மகிமைப்படுத்தும்" என்று ஜெபம் செய்யலாம்.

## 8. ஸ்தேவான் எத்தனை பேர்களைக் கண்டான்?

அப் 7:56, ''அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்.'' ஸ்தேவான், தன் ஜீவன் போகும் நேரத்தில் இரண்டு தெய்வீக ஆட்கள் ஒருவர் பக்கத்தில் ஒருவர் நின்று கொண்டிருப்பதைக் கண்டான் என்று நினைப்பது கேலித்தன மாகும். அது ஏன் அப்படி என்றால்.

a) தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை (யோவான் 1:18, 1யோவான் 4:12).

கொள்கிறார்களோ, அதை மனதில் கொண்டவர்களாய், இதை திரித்துவக்காரர் வாசிப்பது போல் வாசிப்போம்.

'ஆதியில் வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை திரித்துவத்தோடு கூட இருந்தது, அந்த வார்த்தை திரித்துவமாய் இருந்தது." வார்த்தை திரித்துவத்தோடு கூட இருக்குமானால் நமக்கு நான்கு பேர்கள் உள்ளனர். அந்த வசனத்தில் 'தேவன்' என்னும் சொல் திரித்துவத்தைக் குறிப்பிடாமல் பிதாவை குறிப்பிடுகின்றது என்று நாம் கருதினால், அந்த வசனத்தை நாம் இவ்வாறு படிப்போம்; ஆதியிலே வார்த்தை இருந்ததது, அந்த வார்த்தை பிதாவினிடத்தில் (பிதாவோடு கூட) இருந்தது. அந்த வார்த்தை பிதாவாயிருந்தது." அப்படியானால் வார்த்தை குமாரன் அல்ல, பிதா, அதைத்தான் நாங்கள் கூறுகிறோம்.

தேவனுக்கு எது பொருத்தமோ, அதுவே மனிதனுக்கும் பொருத்தமாய் உள்ளது. நீங்கள் எப்படி ஒரு மனிதனையும் அவனுடைய வார்த்தையையும் பிரிக்க முடியும்? உங்கள் வார்த்தை உங்களோடு கூட இருக்கிறது. அது நீங்களாயுள்ளது. ஆனால் அது உங்களை இரண்டு ஆளாக்க விடவில்லை. இந்த வசனம் தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் என்பதை மாத்திரமே உறுதிப்படுத்துகின்றது.

## 6. பிதாவும் இயேசு கிறிஸ்துவும் என்று புதிய ஏற்பாட்டில் கூறப்படுதல்:

நிருபங்களில் அடிக்கடி "பிதாவும் நம்முடைய கர்த்தராகிய யேசு கிறிஸ்துவும்" என்று இணைத்து உபயோகிக்கப் பட்டுள்ளதை நாம் காண்கிறோம். உதாரணமாக, எபே. 1:2ல், ''நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" என்று கூறப்பட்டுள்ளது. இது இரண்டு தெய்வீக நபர்களைக் குறிப்பிடாமல் வேறெதைக் குறிப்பிடுகின்றது என்று திரித்துவக்காரர் கேட்கின்றார்கள். ஒரு வசனத்தை நாம் தெரிந்து கொண்டு இதை விளக்குவோம். அது மற்ற வசனங்களுக்கும் பொருந்தும். ஏனெனில் அர்த்தம் எல்லாவற்றிற்கும் ஒன்றே.

1பேது. 1:3,4, "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.''

இங்கு என்ன கூறப்பட்டுள்ளது என்பதைக் கவனியுங்கள். பிதாவும் மரித்தோரிலிருந்து எழுந்த இயேசுகிறிஸ்துவும்; தேவனும், மரித்து உயிரோடெழுந்து மனிதனும். தேவன் சபைக்கு, தமது தெய்வீகத்தை மாத்திரமல்ல, மானிடத் தன்மையையும் வெளிப்படுத்த விரும்புகிறார் என்று உணர்வோமானால், இதை புரிந்து கொள்ளுதல் மிகவும் எளிது.



(Logos) வெளிப்பட்ட போது, அது முழுவதுமாக வெளிப்பட்டது என்பதை மாத்திரமே இவை எடுத்துக் காட்டுகின்றன. கிறிஸ்துவுக்குப் பின்பு அப்போஸ்தலர்களாகிய பேதுரு, பவுல், யோவான் போன்றவர்களின் மூலம் வெளிப்பட்ட தீர்க்கதரிசன ஊழியத்தைத் தவிர, புதிய ஏற்பாடு தீர்க்கதரிசிகளால் நிறைந்துள்ளது. வாசகர் எபேசியர் 3:1-6 படிக்கட்டும்.

"இதினிமித்தம், பவுலாகிய நான் புறஜாதியாராயிருக்கிற உங்கள் பௌருட்டு கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன். உங்களுக்காக எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற தெய்வ கிருபைக்குரிய நியமமும் இன்னதென்று கேட்டிருப்பீர்களே; அதென்னவெனில் புறஜாதிகள் சுவிசேஷத்தினலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் ஏனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். இதைக்குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன். அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ளலாம்; இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்படிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு (அதாவது, தீர்க்கதரிசிகளுக்கு எசே 2:1) அறிவிக்கப் படவில்லை".

இங்கு பவுல், புதிய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் உள்ளனர் என்பதைக் காண்பிப்பது. மாத்திரமல்ல, நியாயப்பிரமாணத்தின் கீழிருந்த பழைய ஏற்பாடு தீர்க்கதரிசிகள் (மனுபுத்திரர்) நிழலாகக் கண்ட இரகசியங்களை இவர்கள் வெளிப்படையாக அறிவிக்க நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் காண்பிக்கிறான். 'இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் "திருவுளம் பற்றினார்" என்னும் வேதவசனம், கிறிஸ்து தோன்றின பின் அவரைத் தொடர்ந்த எல்லா தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் இவர்களின் செய்தியைக் குறிக்கின்றது. குமாரன் இன்னமும் தாம் நியமிக்கும் செய்தியாளர்களின் மூலம் திருவுளம் பற்றிக் கொண்டிருக்கிறார்.

உலக முடிவின் தருணத்தில். ஒரு தீர்க்கதரிசன ஊழியம் முக்கியத்தவம் பெறும் என்பதை குறித்தும் வேதவசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. முதலாவதாக, புறஜாதியாரை வார்த்தையாகிய லோகாஸாகிய (Logos) குமாரனுடைய உண்மையான செய்திக்கு திருப்புவதற்கும்; இரண்டாவதாக, மேசியாவின் செய்தியை

மகா உபத்திரவ காலத்தின் போது யூதர்களிடம் கொண்டு செல்வதற்கும் (வெளி.11) கீழே சில வேதவசனங்கள் எடுத்து எழுதப் பட்டுள்ளன. அவைகளை ஒன்று சேர்த்து நோக்கினால் ஒரு புறஜாதி முன்னோடியை அவை சுட்டிக் காண்பிக்கும்.

ஆமோஸ் 3:7 **கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.**

கவனியுங்கள், வேதப்பிரகாரமான ஒரு முக்கியமான சம்பவம் நிகழும் முன்பு, தேவன் எப்பொழுதுமே ஒரு தீர்க்கதரிசிக்கு அதை அறிவிக்கிறார். உதாரணமாக, ஜலப்பிரளயத்துக்கு முன்பு நோவாவுக்கு; சோதோம் கொமோரா அக்கினிக்கு இரையாவதற்கு முன்பு ஆபிரகாமுக்கு; இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்க மோசேக்கு; கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்பு யோவானுக்கு; புறஜதியாரிடம் பவுல்; யூதர்களிடம் வெளி.11ல் கூறப்பட்ட இரண்டு சாட்சிகள் போன்றவை.

மல்கியா 4:5,6

**இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்,**

**நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் மிதாக்களுடைய இருதயத்தைப் பினள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்'".**

கர்த்தருடைய நாள் வரும் முன்னே எலியாவின் ஆவி வர வேண்டுமென்று இங்கு தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டுள்ளது. கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் என்பது, கிறிஸ்து வல்லமையோடு நியாயத்தீர்ப்பு செய்ய வரும் அவருடைய இரண்டாம் வருகையைக் குறிக்கிறது என்று எந்த வேத மாணாக்கனும் அறிவான். (ஏசா. 2:12,19; தெச. 5:2,3; 2பேது.3:10)

இந்த இருவிதமான தீர்க்கதரிசனத்தைக் கவனியுங்கள்- எலியா வருவான். எதற்காக?

1. பிதாக்களின் இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கு திருப்புவதற்கும்

2. பிள்ளைகளின் இருதயத்தைப் பிதாக்களிடத்திற்குத் திருப்புவதற்கும்



தன்மையையும் மானிடத்தன்மையையும் அடையாளம் கண்டு கொண்டால், இதை எளிதில் புரிந்து கொள்ள அது திறவுகோலாய் அமையும். இயேசு தம்மிடமே ஜெபம் செய்து கொள்ளவில்லை. அவர் சாதாரண மனிதனாக இருந்திருந்தால், அப்படித்தான் நடந்திருக்கும், ஆனால் இயேசு சாதாரண ஒரு மனிதனல்ல, அவர் ஒருங்கே தேவனும் மனிதனுமாயிருந்தார். அவருக்கு இரு தன்மைகள் இருந்தன. அவை இரு பங்குகளை வகித்தன. இயேசுவின் விஷயத்தில், அவருடைய மானிடத் தன்மை அவருடைய தெய்வீகத் தன்மையிடம் ஜெபம் செய்தது- ஒரு மனிதன் தேவனிடம் ஜெபம் செய்தல்; அவருக்குள்ளும் பரலோகத்திலும் ஒரே சமயத்தில் இருந்த தேவனிடம் (யோவான் 14:10, மத் 12:50). ஜெபம் என்பது, மாம்சமானவர்கள் தேவனிடம் ஏறெடுக்கும் விண்ணப்பம் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. சங் 65:2ஐப் பாருங்கள். "ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்."

கிறிஸ்து மாம்சத்திலிருந்த நாட்களில் ஜெபம் செய்ததாக எபி 5:7 உரைக்கிறது: "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு... அநேக சமயங்களில், இந்த அற்புதமான இரு தன்மை ஜனங்களின் முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது. "மனிதனாக" இயேசு பசியுற்றார், உறங்கினார், அழுதார், படித்தார், ஜெபம் செய்தார். பொதுவாக மானிடர்களில் காணப்படும் அனைத்தையும் அவர் செய்தார்."தேவனாக" அவர் பிணியாளிகளை சுகப்படுத்தினார், மரித்தோரை உயிரோடெழுப்பினார், கொந்தளித்த கடலை அமரிக்கையாக்கினார், மற்றும் பாவங்களை மன்னித்தார். அவருடைய சீஷர்கள் கடலில் இருந்தபோது, புயல்காற்று அவர்களுடைய உயிரைப் போக்க எத்தனித்தது. அப்பொழுது ஒரு மனிதன் கப்பலில் அயர்ந்த நித்திரையாயிருந்தார். அவர் நித்தரையினின்று எழுந்து தம் சத்தத்தை உயர்த்தி, காற்றையும் கடலையும் அதட்டினபோது, அவர் தேவனாக கட்டளையிட்டார். அவர் மனிதனாக லாசருவின் கல்லறையில் கண்ணீர் விட்டு அழுதார். ஆனால் அவர் தேவனாக, 'லாசருவே, வெளியே வா!' என்று உரத்த சத்தமிட்டார். இயேசு மனிதனாக ஜெபம் செய்தார் என்றும், ஆனால் தேவனாக அவர் ஜெபத்தைக் கேட்டு பதிலளித்தார் என்றும் புரிந்து கொள்வது கடினமல்ல.

## 5.யோவான் 1:1 - "அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது"

வார்த்தை தேவனிடத்திலிருந்தபடியால், அது இரண்டு ஆட்களாகிவிடுகிறது என்று திருத்துவக்காரர் கருதுகின்றனர். யோவான் 1:1 இரண்டு தெய்வீக ஆட்களைக் குறிக்கின்றது என்று கருதுவோருக்கு, அவர்கள் எவ்வாறு தேவன் திரித்துவம் என்று அர்த்தம்

## 2. 'ஏலோகிம்' என்னும் பன்மை நாமம் உபயோகிக்கப்படுதல்

உண்மையில் 'ஏலோகிம்' என்பது தேவனுக்கு உபயோகிக் கப்பட்ட பன்மைச் சொல்லாகும். திரித்துவக்காரர்கள் இது தேவத்துவத்திலுள்ள ஆட்களைக் குறிப்பதாக வாதாடுகின்றனர். 'ஏலோகிம்' என்னும் சொல் வேறு பல தெய்வங்களையும் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடுகின்றது (உண்மையான தேவனை அல்லது கற்பனையில் உருவான தெய்வங்களை). உதாரணம், பாகால், நியாயா. 6:31; பாகால்சேபீப் (Beelzebub), 2இரா. 1:2 இவ்விரு தெய்வங்களும் 'ஏலோகிம்' என்னும் பெயரால் அழைக்கப் பட்டன. ஆனால் அவை திரித்துவமல்ல. 'ஏலோகிம்' என்னும் சொல் ஆட்களின் பன்மையைக் குறிக்காமல், தன்மைகளின் பன்மையையும் மகத்துவத்தின் பன்மையையும் குறிக்கின்றது.

## 3. இயேசு கிறிஸ்துவின் தண்ணீர் ஞானஸ்நானம்:

இயேசு கிறிஸ்து யோவான் ஸ்நானனால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபோது, மூன்று பேர்கள் இருந்ததாக திரித்து வக்காரர் கூறுகின்றனர்- பிதா. பரலோகத்தில் இருந்தார், பரிசுத்த ஆவி பரலோகத்துக்கும் பூமிக்கும் இடையே எங்கோ ஓரிடத்தில் இருந்தார், குமாரன் பூமியிலிருந்தார் என்பதாக. இயேசு கிறிஸ்து யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்ற போது நிகழ்ந்த காட்சியைக் காட்டிலும், தேவனுடைய மகத்துவத்தையும் தோற்றங்களையும் தெளிவாக விளக்கும் காட்சி வேறெதுவும் இருக்க முடியாது. ஒரே சமயத்தில் பூமியிலும் பரலோகத்திலும் இருப்பதென்பது தேவனுடைய சர்வல்லமையுள்ள ஆதிக்கத்தில் அடங்கியுள்ள ஒரு செயலாகும். இயேசு அப்படி இருந்ததாக கூறினார். யோவான் 3:13; 1:18 படியுங்கள். அது மாத்திரமல்ல, அவருக்குள் வாசம் செய்த பிதாவே இந்த அற்புதமான கிரியை களைச் செய்ததாக அவர் யோவான் 14:10ல் உரிமைகோரினார். ஆவி இறங்கின போது, பிதா பரலோகத்தில் தங்கியிருந்தாரென்றால், பிதா எங்கு, எப்பொழுது கிறிஸ்துவுக்குள் வந்தார்?

அப்படியானால் இறங்கின ஆவியும் பிதாவாக இருக்க வேண்டும் அல்லவா?

## 4. யாரிடம் இயேசு ஜெபம் செய்தார்?

சுவிசேஷங்களில் காணப்படும் சம்பவங்கள்- உதாரண மாக, சிலுவையிலறையப்பட்ட இயேசு பிதாவிடம் ஜெபம் செய்தல் போன்றவை - தேவத்துவத்தில் இரண்டு ஆட்கள் இருக்கின்றனர் என்னும் கருத்துக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டப் படுகின்றன. திரித்துவக்காரர் ஒருவர், "இயேசு தம்மிடமே ஜெபம் செய்து கொண்டாரா என்ன?" என்று கேட்பார். "அப்படி இல்லை யென்றால், இரண்டு பேர்கள் இருக்க வேண்டுமே" என்பார். ஒருவர் மற்றவரிடம் ஜெபம் செய்தார் என்பதே அவர் கருத்து. இயேசுவின் தெய்வீகத்



இந்த தீர்க்கதரிசனத்தின் ஒரு பாகம் நிறைவேறுதலை நாம் அடியில் காணலாம்.

லூக்கா 1:17

**பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப் படுத்தும் படியாக அவன்** எலியா**வின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான்."**

இது யோவான் ஸ்நானனைக் குறிக்கிறது என்பது உண்மையே. ஆனால் கவனியுங்கள்: பரிசுத்த ஆவி மல்கியாவின் தீர்க்கதரிசனத்தை இரு பாகங்களாகப் பிரித்து, யோவான் ஸ்நானன் அதன் முதல் பாகத்தை நிறைவேற்றினதைக் காண்பிக்கிறார்.

கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாளுக்கு முன்பு யோவான் ஸ்நானன் தோன்றிவில்லை. இயேசு நல்ல மேய்ப்பனாக இவ்வுலகில் ஊழியம் செய்வதற்கு முன்பு அவன் தோன்றினான்.

மத்தேயு 17:10-12.

**"அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: அப்படியானால் ஏலியா முந்தி வர வேண்டும் ஏன்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்படியென்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்படுத்துவது மெய்தான். ஆனாலும் எலியா வந்தாயிற்று என்றூ உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனை அறியாமல்**

கிறிஸ்து முந்தின வசனத்தில் செய்தது போலவே, இந்த வசனத்திலும் எலியாவின் ஊழியத்தை இரண்டாகப் பிரிக்கிறார் என்பதைக் கவனியங்கள். எலியாவின் ஊழியத்தின் ஒரு பாகம் ஏற்கனவே நிறைவேறி விட்டதென்றும் அதன் மற்ற பாகம் பின்பு நிறைவேறுமென்றும் அவர் குறிப்பிடுகிறார். இந்த தீர்க்கதரிசி, தன் ஊழியத்தில், ''எல்லாவற்றையும் சீர்படுத்துவான்'' என்று ஒரு முக்கியமான பாகத்தை இங்கு அறிமுகப் படுத்துகிறார்.

2 தெசலோனிக்கேயர் 2:3

**எவ்விதத்திலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காத படிக்கு. எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச தூரோகம் முந்தி**

**நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.**

விசுவாசதுரோகம் முந்தி நேரிட்டாலொழிய கர்த்தருடைய நாள் வராது என்று பவுல் இங்கு குறிப்பிடுகின்றான். “விசுவாச துரோகம்” என்னும் வார்த்தை, அப்போஸ் டாஸியா (Apostasia) என்னும் கிரேக்க சொல்லிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு, விசுவாசத்திலிருந்து விழுந்து போதலைக் குறிக்கின்றது. வாசகர் 2தெச. 3ம் அதிகாரம் முழுவதையும் படிப்பாரானால் முக்கியமாக 12,13,15 வசனங்களை அப்போஸ்தலர்களால் கொண்டு வரப்பட்ட தேவனுடைய வார்த்தையிலிருந்து விழுந்து போதல் உண்டாகும் என்று பவுல் எச்சரிப்பதைக் காணலாம். இது அப்படியே கி.பி. நான்காம் நூற்றாண்டில் நிறைவேறினது. அப்பொழுது ரோமன் கத்தோலிக்க மார்க்கம் ஆதிக்கம் கொண்டு, வேதாகமத்தின் அதிகாரத்தை எடுத்துப் போட்டு, அதற்கு பதிலாக சபையின் அதிகாரத்தை நுழைத்து கிறிஸ்தவ மார்க்கத்தை அஞ்ஞான மார்க்கத்துக்கு விவாகம் செய்து கொடுத்து அதனுடன் இணைத்தது.

அப்போஸ்தலர் 3:21

**“உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய** வா**க்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும்.”**

பேதுருவும் கூட, இறிஸ்து சரீரப்பிரகாரமாக திரும்ப வரும் முன்பு, எல்லாம் நிறைவேற வேண்டும் என்று கூறுகிறான். “எல்லாம் நிறைவேறுதல்” என்பது, “எல்லாம் சீர்படுத்தப்படுதல் அல்லது திரும்ப அளிக்கப்படுதல்” என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க மூல சொல்லைக் கொண்டுள்ளது. இதற்கும் மத். 17:11க்கும் உள்ள ஒற்றுமையை கவனியுங்கள். பேதுருவும் இந்த “எல்லாம்” என்னவென்பதை குறிப்பிடுகின்றான்: “தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம்.” அது தேவனுடைய வார்த்தை எல்லாம் சீர்படுதல். வேறென்ன அவருடைய தீர்க்கதரிசிகளின் வாயினால் உரைக்கப்பட்டது? (2 பேதுரு 1:20,21).

இந்த வேதப் பிரகாரமான சித்திரத்தை நமது கடைசி வசனத்துக்கு கொண்டு சென்று, கீழ் கர்ண்பவைகளை நிரூபிக்கலாம்.



## 1. பழைய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ள பன்மை பிரதிப்பெயர்கள் (Plural Pronouns):

ஆதி, 1:26, "நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக." மேலும் ஏசா. 6:8, "பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாகப் யோவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன்."

இவ்விரு வசனங்களிலும், மற்றும் வேறு வசனங்களிலும், பன்மை பிரதிப் பெயரை உபயோகித்திருப்பது, தேவனுடைய பன்மைத் தன்மைக்கு உறுதியான ஆதாரமென்று திருத்தவக் காரர்கள் சமர்ப்பிக்கின்றனர். இந்த பன்மை பெயர் உபயோகங்களை அல்லது தோற்றங்களை எடுத்துரைக்க தேவன் கையாண்ட முறையாகும்.

இதைக் காட்டிலும் தெளிவான உபயோகித்தல் யோவான். 14:23ல் காணப்படுகன்றது: 'ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்".

ஏற்கனவே 1கொரி 12:13லும் அப்.2:4லும் காண்பிக்கப் பட்டபடி, ஒரே நபர் தான் நம்மிடம் வந்தார் என்பது உண்மை- பரிசுத்த ஆவி, (இதை திரித்துவக்காரரும் ஒப்புக் கொள்கின்றனர்). ஆயினும் இயேசு,"நாங்கள் வருவோம்'' என்கிறார். இந்த "நாங்கள்" யார்? அது மாம்சத்தில் வெளிப்பட்டவர் அல்லது குமாரன்; மற்றும் தேவன் அல்லது பிதா. அது ஒரே தேவனின் இரண்டு வெளிப்படுத்தல்கள். எனவே தேவன் தம்மை பன்மையில் குறிப்பிடுகின்றார். உலகத்தோற்றத்துக்கு முன்பே இந்த முழு திட்டமும் தேவனுடைய சிந்தையில் பதிந்திருந்தது. தொடக்கத்திலிருந்தே அவர் இந்த அற்புதமான வேறுபட்ட தோற்றங்களை (diversity) பன்மையில் கூறி வந்தார். நித்தியம் முழுவதிலும் அவர் அவ்வாறே மாம்சமாகவும் ஆவியாகவும் குறிப்பிடப்படுவார்.

தேவன் வேதாகமம் முழுவதிலும் தமது தன்மைகளாகிய (attributes) பிதாத்துவம், குமாரத்துவம், உள்ளே வாசமாயிருக்கும். பரிசுத்த ஆவி இவைகளை அடையாளம் கண்டு கொண்டே வருகிறார் என்பதே இதன் விளக்கம். நாம் மூன்று உத்தியோகங்களில் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஆனால் அது ஒரே தேவன் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இந்த சிறப்பான இரகசியம் என்னவெனில், ஒரே தேவன் இவையனைத்தையும் செய்தார்- அவர் இரட்சகர், சுகமளிப்பவர், அபிஷேகம் பண்ணுகிறவர், நியாயாதிபதி, மத்தியஸ்தர், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி!

லூக்கா 1:35ல் தேவதூதன் மரியாளிடம் வந்து, விரைவில் அவளுக்கு நேரிடவிருந்த அந்த அற்புத பிறப்பைக் குறித்து அறிவித்த போது, மிகவும் வெளிப்படையான விதத்தில் அதை விவரிக்கிறான்:

உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்."

அப்படியானால் யார் இந்த தேவனுடைய, குமாரன்? மரியாள் என்னும் கன்னிகைக்கு விரைவில் பிறக்கவிருக்கும் அந்த பரிசுத்தமுள்ளது தான் தேவனுடைய குமாரன் என்று தேவ தூதன் கூறினான். அந்த குழந்தை; அந்த மாம்சம்; அந்த ஆண் குழந்தை; தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டது.

தேவன் (தேவனுடைய அனைத்தும்) மாம்சத்தில் வெளிப்பட்டார். (1தீமோ.3:16). அப்படியானால் குமாரன் - அந்த மனிதன் - நித்தியமானவரல்ல. அவர் ஸ்திரீயின் முலம் பிறந்தவர். "அவர் ஒரே பேறான குமாரன்" (only begotten Son) என்று யோவான் 3:16 உரைக்கின்றது.

தேவனுடைய குமாரன், தீர்க்கதரிசனமாக அன்று பழைய ஏற்பாட்டில் கூறப்படவில்லை. அவரைக் குறித்து கூறப்படாததன் காரணம், அவர் அப்பொழுது இருக்கவில்லை. அவர் வர வேண்டிய ஒருவர் என்று தேவனுடைய சிந்தையில் மாத்திரமே இருந்தார். அவரை நித்திய குமாரன் என்று குறிப்பிடும் வேத வாக்கியம் எதுவும் கிடையாது. அவர் பெற்றெடுக்கப்பட்ட குமாரன் என்பது நாமெல்லாரும் அறிந்ததே. யோவான் 14:10ல் இயேசு, தாம் யாரென்பதை தெளிவாக விளக்குகிறார்: “நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை. என்னிடத்தில் (எனக்குள்) வாசமாயிருக்கிற பிதாவானவ ரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார்" இதைக் காட்டிலும் தெளிவான அல்லது நேரடியான ஒரு பிரகடனம் வேறெது இருக்க முடியும்! நம்முடைய பிதா தயையுள்ளவராய், தமது குமாரனில் -ஒரு கன்னிகையின் வயிற்றில் பிறந்த மனிதனில் - தம்மை வெளிப்படுத்த சித்தங் கொண்டார். அவர் தேவனும் மனிதனு மாயிருந்தார்-தேவன்- மனிதன். “என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்று இயேசு கூறினார் (யோவான் 14:9). குமாரனைக் காண்பது பிதாவைக் காண்பதாகும். பிதாவை அறிவது குமாரனை அறிவதாகும்.

இந்த அருமையான கருத்தைப் புரிந்து கொண்டால். தேவத்துவத்தைக் குறித்த இரகசியம் மிக அற்புதமாக தெளிவாகும்.

## ஆட்சேபனைகளை ஆராய்தல்

திரித்துவக்காரர்கள் தங்கள் உபதேசத்தை ஆதரிக்க அநேக விவாதங்களை சமர்ப்பிக்கின்றனர். அவைகளில் முக்கியமான வைகளை நாம் சுருக்கமாக ஆராய்வோம்:



1) எலியா ''எல்லாவற்றையும்'' சீர்படுத்த வேண்டும் (Restore) (மத் 17:11).

2) கிறிஸ்துவின் சரீரப் பிரகாரமான இரண்டாம் வருகைக்கு முன்பு எல்லாமே நிறைவேற வேண்டும் (அப். 8:81).

3) 'எல்லாம்' என்பது தேவனுடைய தீர்க்கதரிகளின் மூலம் உரைக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையாகும். (அப். 3:21)

வெளி. 10:6

.....ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரரரகிய தீர்க்கதரிசிகளுக்குச் சவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களில் அவ்ன் எக்காளம் ஊதப் போகிறபோது தேவரகசியம் நிறைவேறும்.

இந்த ஏழாம் தூதன், தீர்க்கதரிசிகளுக்கு அறிவிக்கப்பட்ட தேவரகசியத்தை பிரசங்கிக்கும் செய்தியாளன் என்று கூறப்பட்டுள்ளது. இந்த இரகசியம் கிறிஸ்துவைக் குறித்த இரகசியமாகும். 1 தமோ.3:16ன் படி, அது தேவன் மாமிசத்தில் வெளிப்படுதலாம். ஆதி சபை தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் இவர்களுடைய செய்தி முழுவதுமே தேவன் மாமிசத்தில் வெளிப்பட்டார் என்பதாகும். இந்த ஏழாம் தூதன் புறஜாதிகளின் சபைக்கு அதே வார்த்தையை (Logos) மறுபடியும் உறுதிப்படுத்துவார்.

வெளிப்படுத்தின விசேஷத்தின் முதல் அதிகாரங்கள் புறஜாதி சபைக்கு எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்பதை வாசகர் எவரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாயுள்ளது. ஒரு காலத்தில் ஆசியா மைனரில் இருந்த ஏழு புறஜாதி சபைகளின் நிலையையும் விசேஷ தன்மைகளையும் அவை வர்ணிக்கின்றன. இந்த வியாக்கியானம், வெளிப்பாடு அளிக்கப்பட்ட யோவான் அப்போஸ்தலனின் காலத்துக்கு மாத்திரதே உரியது என்று கருதுவது தவறாகும். வெளிப்படுத்தின. விசேஷத்தின் முதலாம் வசனம், “சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளை” அது கொண்டுள்ளதாக கூறுகின்றது. எனவே அப்புத்தகம் முழுவதுமே தீர்க்கததரிசனப் புத்தமாகும். அது உடனே தோன்றவிருக்கும் எதிர்காலத்திலிருந்து ஆரம்பித்து, புறஜாதியாரின் காலம், 144000 யூதர்கள் அழைக்கப் படுதல், ஆயிரம் வருட அரசாட்சி, வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு, மற்றும் புதிய எருசலேம் இவைகளைக் குறித்து தொடர்ச்சியாக அறிவிக்கிறது.

அப்படியானால் அதில் குறிக்கப்பட்டுள்ள ஏழு சபைகளும் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டவையே. அவை தேவன் புறஜாதிகளுக்கென அளித்த காலத்தில் காணப்பட்ட ஏழு சபைகளின் விசேஷ தன்மைகளை சித்தரிப்பவைகளாய் உள்ளன. எபேசு சபை காலம் தொடங்கி லவோதிக்கேயா சபை காலம் வரைக்குமுள்ள ஒவ்வொரு காலத்துக்கும் ஒரு தூதன் இருந்தான். அவன் தேவனிடமிருந்து செய்தியை அவனுடைய சபைக்குக் கொண்டு வந்தான், 'தூதன்' (Angel) என்னும் சொல், 'செய்தியாளன்' (Messenger) என்று பொருள்படும், இங்கு அது பரலோகத்திலுள்ள தூதர்களைக் குறிப்பிடவில்லை, ஆனால் உலகிலுள்ள மனித செய்தியாளர்களையே குறிக்கிறது. அவர்கள் மூலம் ''ஆவியானவர் சபைக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக் கடவன்." ('தூதர்கள்' என்னும் சொல்லைப் பற்றி அறிய இப்புத்தகத்தின் பின்னாலுள்ள முதலாம் சேர்ப்புரையை காண்க), கடந்த இரண்டாயிரம் ஆண்டு காலமாக தேவன், பவுல், ஐரினேயஸ். மார்டின், கொலம்பா, லூத்தர், வெஸ்லி என்னும் மகத்தான தலைவர்களை தொடர்ச்சியாக ஒவ்வொரு காலத்திலும் எழுப்பி, விசுவாசத்தைப் பாதுகாத்து வந்தார். சீர்திருத்தக்காரர்கள்- முக்கியமாக இருளின் காலங்களுக்குப் பின்பு எழும்பினவர்கள்- வார்த்தை மீண்டும் சபைக்கு அளிக்கப் படுவதற்கென அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தனர். தேவன் லூத்தர், வெஸ்லி இவர்களின் ஊழியத்தை மகத்தான எழுப்புதல்களால் ஆசிர்வதித்தார். அவர்களுக்கு வார்த்தையின் வெளிச்சம் மீண்டும் இறந்து அளிக்கப்பட்டது. ஆனால் இந்த செய்தியாளர்களைப் பின்பற்றினவர்களோ, தேவன் அவர்களுக்களித்த வெளிச்சத்திலும், அவர் தொடர்ந்து வெளிப்படுத்தின வெளிச்சத்திலும் நடக்க மறுத்தனர். அவர்கள் வார்த்தை புதுப்பிக்கப்படுதலின் ஒரு பாகத்துடன் நிறுத்திக் கொண்டு, ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்டு, மரித்து, அவர்கள் எந்த சபையினின்று விடுதலையாக்கப்பட்டனரோ, அந்த சபையில் காணப்பட்ட அதே போன்ற பாரம்பரியத் தன்மைகளை பெற்றுக் கொண்டனர். எனவே ஏழாம் தூதன் அல்லது லவோதிக்கேயா சபையின் தூதன், இதற்கு முன்பு நாம் கூறின தேவனுடைய இரகசியம் அனைத்தையும் எக்காள முழக்கமிடுவான் என்று வெளி 10:6 உரைக்கின்றது. இக்கடைசி தூதன் தோன்றும் போது, ஆதி சபை ஸ்தாபனம் உண்டாக்கிக் கொண்டதால் மறைந்து 'போன வார்த்தை அனைத்தையும் பிரகடனம் செய்து, எடுத்துக் கொள்ளப்படுதல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை முதலானவைகளில் அடங்கியுள்ள இரகசியங்களை வெளிப்படுத்துவான்.



**ஜோசப் மாட்சன் போஸ்:** ஒரு ஆழ்ந்த பரிசுத்தம் கூட்டங்களில் ஊடுருவின காரணத்தால், எனக்கு சில சமயங்களில் பயம் உண்டானது. ஆனால் தேவனுடைய வரம் தமது ஊழியக்காரன் மூலம் கிரியை செய்ததையும், அவருடைய ஊழியத்தின் மூலம் பாய்ந்த அன்பின் அனலைக் காண நான் ஒருக்காலும் தவறினதில்லை" (விசுவாசத்தை அறைகூவுதல், பெப்ருவரி, 1966).

## சேர்ப்புரை III

## தேவத்துவம்

## தேவனுடைய குமாரனின் ஒப்பற்ற தன்மை:

தேவத்துவத்தைக் குறித்து நாம் அறிந்து கொள்ள வேண்டுமானால், தேவனுடைய குமாரன் என்று சுவிசேஷங்களில் அழைக்கப்படுவரின் ஒப்பற்ற தன்மையையும், அவருடைய அற்புதமான பிரபலத்தையும் உணர வேண்டியவர்களாயிருக்கிறோம். தேவனுடைய குமாரன் நித்தியமானவராயும், தேவத்துவத்தில் இரண்டாம் ஆளாகவும் இருக்கிறார் என்று உலகிலுள்ள பெரும்பாலோரை நம்பச் செய்வதில் திரித்துவக்காரர்கள் வெற்றி கண்டுள்ளனர். இந்த குமாரத்துவம் நித்தியமான ஒன்றல்ல. அது இரண்டாம் ஆளையும் குறிப்பிடுவதல்ல. 'தேவனுடைய குமாரன் என்பது தம்மை வெளிப்படுத்த தேவன் நியமித்த ஒரு பாண்டத்தை (vessel) விவரிக்கும் ஒரு எளிய சொல்லாக அமைந்துள்ளது. அதை மறுபடியும் கூறுகிறேன். தேவனுடைய குமாரன் என்னும் சொல் இந்த மனிதனை- அதாவது தேவன் வாசம் செய்த சரீரத்தை- விவரிக்க உபயோகிக்கப்பட்டுள்ளது. நீங்கள் 'தேவனுடைய குமாரன்' என்னும் சொல்லை எப்பொழுதாகிலும் எங்காகிலும் காண நேர்ந்தால், அது மனிதனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறிப்பிடுகின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இந்த அற்புதமான படைப்பு எவ்வளவாக தேவனாக இருந் தாரோ, அவ்வளவாக மனிதனாகவும் இருந்தார். அவர் தேவன் உருக்கி, மானிடத் தன்மையும் தெய்வீக தன்மையும் இணைத்து கொண்டவராகத் திகழ்ந்தார். அவர் மூலம் தேவன் மாம்சமாகி, மீட்பின் உறவின் முறையானானார். தேவத்துவத்தையும், இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்த தன்மையையும், மற்றும் மீட்கப்பட்ட தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாகிய நம்முடைய நிலையை அறிந்து கொள்ளவும் இதைக் காட்டிலும் அடிப்படையான வெளிப்பாடு வேறில்லை எனலாம்.

இந்த தேவனுடைய குமாரன் எங்கு, எப்பொழுது தோன்றினார்? இந்த குமாரரில் குமாரனை பவுல் கலாத்தியருக்கு எவ்வாறு விவரிக்கிறான் என்பதைக் கவனியுங்கள்: 'ஸ்திரீயினிடத்தில் பிறந்த தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்." (கலா.4:4). எனவே தேவனுடைய குமாரர், ஒரு ஸ்தீரீயினிடத்தில் பிறந்தார். அவருடைய மானிடத் தன்மையைக் காணத் தவறாதீர்கள்.

ஞாபகார்த்த ஆராதனையில் ஆற்றிய சொற்பொழிலிலிருந்து சில பகுதிகள்)

**ஜார்ஜ் எகெரோத்:** "தேவன் இந்த தாழ்மையுள்ள மனிதனை அழைத்தார். அவருடைய ஊழியத்தை ஒரு பிரத்தியேக நிலைக்கு அபிஷேகித்ததன் விளைவாக, ஒரு சில ஆண்டுகளுக்குள் அவருடைய பெயர் தூர நாடுகளிலுள்ள காடுகளிலும் கூட பரவினது. இவ்வுலகில் நீங்கள் எங்கு சென்றாலும், இந்த தூதனின் பெயர் அதற்கு முன்பு அங்கு அறியப்பட்டுள்ளதைக் காணலாம் (மாரிஸ் செருலோ எழுதிய "இருபதாம் நூற்றாண்டில் அடித்த காற்று" என்னும் புத்தகத்தின் முகவுரையிலிருந்து)

**டேவிட் எட்வின் ஹாரல் (ஜூனியர்):** "1947ம் ஆண்டு தொடங்கி நடந்து வரும் சுகமளிக்கம் எழுப்புதலில் பங்கு கொண்ட பெரும்பாலோர், சகோ. பிரன்ஹாம் தான் அதை ஆரம்பித்தவர் என்னும் கருத்தைக் கொண்டுள்ளனர் ஒரு சந்ததிக்கு சகோ. பிரன்ஹாம் தீர்க்கதரிசியாக விளங்கினார்... இரவுக்குப் பின் இரவு, பிரமித்துக் போன ஆயிரக்கணக்கான விசுவாசிகளின் முன்னிலையில். அவர் பிணியாளிகளின் வியாதிகளைப் பகுத்தறிந்து, அவர்கள் சுகம் பெற்றுவிட்டதாக அறிவித்தார்.'

'சகோ. பிரன்ஹாமின் ஊழியத்தின் போது காணப்பட்ட வல்லமை ... பரிசுத்த ஆவியின் இயக்கத்தின் வரலாற்றிலேயே இணையற்ற வரலாறு காணாத ஒரு சம்பவமாக இருந்து வருகின்றது. ("எல்லா காரியங்களும் கூடும் என்னும் புத்தகத்திலிருந்து)

**ஜேம்ஸ் மாரீஸ்:** 'சுவிசேஷகர்கள் அனைவரிலும் சகோ. பிரன்ஹாம் தான், 1946ம் ஆண்டு மே 7ம் தேதியன்று ஒரு தூதனுடன் நேர்ந்த சந்திப்பின் பிறகு, இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்பு எழுந்த அடிப்படை விசுவாச சுகமளிக்கும் எழுப்புதலை ஆரம்பித்து வைத்தவர் ஆவார்".

"இந்தியானாவைச் சேர்ந்த இச்சிறு பிரசங்கியின் மூலம். சகலவியாதிகளும் துன்பங்களும் உடனடியாக குணமாகின்றன என்னும் செய்தி எல்லாவிடங்களிலும் பரவினது.' (பிரசங்கிமார்கள் என்னும் புத்தகத்திலிருந்து)

**தாமஸ் ஆர். நிக்கல்:** "வேதாகம நாட்களில் தீர்க்கதரிசிகளும் ஞான திருஷ்டிக்காரருமான அநேக தேவனுடைய மனிதர்கள் இருந்தனர். ஆனால் அந்த பரிசுத்த வேதாகமம் அனைத்திலும், தீர்க்கதரிசியும் ஞானதிருஷ்டிக்காரருமான வில்லியம் பிரன்ஹாமின் ஊழியத்தைக் காட்டிலும் பெரிதான ஊழியம் இல்லை எனலாம். அவருடைய புகைப்படம் "முழு சுவிசேஷ மனிதரின் சத்தம்" என்னும் பத்திரிக்கையின் இந்த வெளியீட்டின் முன் உறையில் (front cover) காணப் படுகின்றது. இயேசுவின் நாமத்தினால் மரித்தோரை உயிரோடெழுப்ப பிரன்ஹாம் தேவனால் உபயோகிக்கப் பட்டார்." (முழு சுவிசேஷ மனிதரின் சத்தம், Quijor, 1961).



# இரண்டாம் அத்தியாயம்

# வில்லியம் பிரன்ஹாமின் வாழ்க்கையும் ஊழியமும்

## தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனிதன்

வில்லியம் பிரன்ஹாம் ஊழியமும் ஒரு முக்கிய தீர்க்கதரிசியின் (Major Prophet) ஊழியமாகக் கருதப்பட தகுதி பெற்று மல் 4: 6ம் வெளி 10:6ம் நிறைவேற்றுவதாய் அமைந்துள்ளது என்னும் உண்மை, அதன் முக்கியத்துவத்தையும் அது ஜனங்களில் உண்டாக்கியுள்ள பாதிப்பையும் (Impact) ஆராய நேரம் எடுத்துக் கொண்டவர் அனைவருக்கும் தெளிவாகும். கார்டன் லின்ட்சே (Gordon Lindsay) என்பவர், தாம் எழுதியுள்ள 'தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனிதன்' என்னும் புத்தகத்தின் முகவுரையில் பொருத்தமான பாராட்டை எழுதியுள்ளார். இவர் தேவனுடைய தீர்க்கதரிசியுடன் பயணம் செய்தபோது, தாம் பெற்ற அனுபவங்களையும் அவர் கண்ணாரக் கண்டவைகளையும் இப்புத்தகத்தில் எழுதி வைத்துள்ளார். அவருடைய பாராட்டு பின்வருமாறு:

வில்லியம் பிரன்ஹாமின் வாழ்க்கை இவ்வுலகிற்கும் சாதாரண காரியங்களுக்கும் மிகவும் அப்பாற் பட்டதாயுள்ளதால் அதன் உண்மைத்துவத்தை நிரூபிக்க நிறைய பிழையற்ற (Infallible) நிருபணங்கள் இல்லாமல் போயிருந்தால்; இது நம்பத்தகாதது என்றும், கூடாத காரியம் என்று கருதுபவர்களை நரம் மன்னிக்க வேண்டியவர்களாயிருப்போம். ஆனால் இவ்வுண்மைகளை பொதுவாக எல்லாரும் அறிந்திருக்கிறதாலும், இதை ஆராய விரும்பும் எவரும் அது உண்மையென்று எளிதாகக் கண்டு கொள்ளத்தக்க விதத்தில் இவை அமைந்துள்ளதாலும், தேவன் எவ்வாறு முற்காலங்களில் தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் "இவர்களின் காலத்தில் தம்மை வெளிப்படுத்தினாரோ, அதே விதமாக மறுபடியும் தம்மை இக்காலத்தில் வெளிப்படுத்த சித்தங்கொண்டவராகவும் நோக்கமுள்ளவராயும் இருக்கிறார் என்பதற்கு இவர்கள் தேவனுடைய சாட்சிகளாக நிற்க வேண்டியவர்களாயுள்ளனர். இந்த தீர்க்கதரிசியின் வாழ்க்கை- இவர் தீர்க்கதரிசியே, தீர்க்கதரிசி என்னும் அந்த சொல்லை நாம் அடிக்கடி உபயோகிப்பதில்லை. வேதாகம நாட்கள் மறுபடியும் இங்குள்ளது என்னும் உண்மைக்கு சாட்சியாக அமைந்துள்ளது."

திரு. லின்ட்சேவைத் தவிர இன்னும் அநேகர் வில்லியம் பிரன்ஹாமின் வாழ்க்கையில் நடந்த தெய்வீக அற்புதங்களையும்

அடையாளங்களையும் குறித்து பிரமிப்படைந்துள்ளனர். அவர்களில் சிலர், T.L. ஆஸ்பார்ன், ஜாக் மூர், ஜோசப் மாட்சன் போஸ் என்பவராவர் (இவர்களும் இன்னும் மற்ற தேவனுடைய ஊழியக்காரரும் கூறியுள்ளவைகளை 'சாட்சிகள்' என்னும் தலைப்பில் எழுதியுள்ள இரண்டாம் சேர்ப்புரையில் காண்க).

## தீர்க்கதரிசியின் நடபடிகள்

வாசகர்களுக்கு வில்லியம் பிரன்ஹாமின் வாழ்க்கை யையும் ஊழியத்தையும் குறித்த ஒரு கருத்தை துரிதமாக அளிக்க சங்கை பெர்ரீ கிரீன் (Rev. Perry Green) என்பவர், தாம் எழுதியுள்ள தீர்க்கதரியின் நடபடிகள்' (Acts of the Prophet) என்னும் புத்தகத்தில் எழுதி வைத்துள்ள அவருடைய வாழ்க்கை வரலாற்றின் சுருக்கம் ஒன்றினை தேர்ந்தெடுத்துள்ளேன். சங்கை கிரீன் சகோ. பிரன்ஹாமின் நண்பரும் கூட்டாளியுமாவார்- முக்கியமாக சகோ. பிரன்ஹாமின் பின் காலத்தில். அநேக கருத்துக்கள் அடங்கிய இச்சிறு புத்தகம் சங்கை கிரீன் தமது கூடாரத்தில் நிகழ்த்திய பிரசங்கங்களின் தொகுப்பாகும்.

## பால்ய வாழ்க்கையும் மனம் மாறுதலும்

1909ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ம் தேதியன்று பதினைந்து வயதான கென்டக்கி நாட்டு பெண் ஒருத்தி ஒரு குழந்தையைப் பெற்றாள். அவர்கள் அதற்கு வில்லியம் மரியன் பிரன்ஹாம் என்று பெயரிட்டனர். அக்குழந்தை பிறந்த அந்நாளில் ஒரு வினோதமான ஒளி-ஒரு பிரசன்னம் கிராமப் புறத்திலிருந்த அந்த சிறு மரக் குடிலில் காணப்பட்டது. ஒரு ஒளி சுழன்று வந்து, சன்னலின் வழியாய் உள்ளே நுழைந்து, படுக்கையின் மேல் தொங்கினது. அதைக் கண்ட யாவரும், “இது எப்படிப்பட்ட குழந்தையோ?” என்று கூறினதில் வியப்பொன்றுமில்லை. அக்குழந்தைக்கு ஆறு மாதமான போது அதன் மேலிருந்த தேவனுடைய பாதுகாப்பு நிரூபிக்கப்பட்டது. அதுவும் அதன் தாயும் அம்மரக் குடிலில் தவித்துக் கொண்டிருந்த போது, தந்தை வேலைக்காக வெளியே சென்று விட்டிருந்த சமயம் அது - அவர்கள் அற்புத விதமாக நிச்சயமான மரணத்தினின்று காக்கப்பட்டனர், ஒரு பெரிய பனிப்புயல் அம்மரக் குடிலை தனியாகப் பிரித்து விட்டது. ஆகாரமும் விறகும் தீர்த்துவிட்டது. எனவே அந்த வாலிபத் தாய் தன்னையும் குழந்தையையும் தங்களுக்கிருந்த படுக்கை துணி படுக்கை துணி அனைத்திலும் சுற்றிக்கொண்டு படுக்கைக்குச் சென்று சாவதற்கு காத்திருந்தனர். அப்பொழுது சற்று தூரத்திலிருந்த அயலான் ஒருவர், தன்னால் விவரிக்கக் கூடாத ஒரு வினோத தோற்றத்தின் காரணமாக, அக்குடிலுக்கு வந்து, அதிலுள்ளோர் எப்படி இருக்கின்றனர் என்று அறிய அநேக நாட்களாக மனதில் தூண்டப்பட்டார். ஒரு நாள் அந்த ஆவல் அவருக்கு மிகவும் அதிகமாகி விட்டதால், அவரால் இனியும் பொறுத்துக் கொள்ள. முடியவில்லை. அவர் மலையைக் கடந்து குடிலை அடைந்த போது, அவர்கள் இறந்து போகும் தருவாயிலிருப்பதை கண்டார். உடனே அவர் விறகு பொறுக்கி, நெருப்புண்டாக்கி, வீடு திரும்பி சென்று, ஆகாரம் கொண்டு வந்து,



2:25, கிரேக்கு; வெளி.1:20; 2:1,8,13, 18; 3:1,7,14...ஆகிய வசனங்களில் மனிதரைக் குறிக்க உபயோகிக்கப்பட்டுள்ளன.

## சேர்ப்புரை II

## சாட்சிகள்

**ஒரல் ராபர்ட்ஸ்:** "தாழ்மையும் பக்தியும் கொண்ட ஒரு தேவனுடைய மனிதன்" (சுகமளிக்கும் தண்ணீர்கள், ஜூலை 1948). கார்டன் லின்ட்சே: செவிடர்களையும் ஊமையர்களையும் ஜெபத்திற்கு அழைத்து, அவர்கள் அந்த இடத்திலேயே விடுதலையாயினர். இத்தகைய மற்றொரு பிரசங்கியை நாங்கள் கண்டதேயில்லை .. இதற்கு முன்பு நாங்கள் கண்ட ஊழியம் அனைத்திலும் மிகச் சிறந்த ஊழியம்.'' (கர்த்தர் கட்டின வீடு).

**ஜாக் மூர்:** "எல்லா சுவிசேஷர்களை விட சிறந்த வரம் பெற்றவர்" (டேவிட் எட்வின் ஹாரேல் ஜூனியர் எழுதிய எல்லா காரியங்களும் கூடும் என்னும் புத்தகத்தில்)

**எஃப், எஃப் பாஸ்வர்த்:** “வரம் கிரியை செய்யும் போது, சகோ. பிரன்ஹாம் தேவனுடைய பிரசன்னத்துக்கும், பரிசுத்த ஆவியின் கிரியைக்கும், எந்த ஒரு நபரின் ஆவிக்குரிய நிலைக்கும், நான் இதுவரை அறிந்தவர் அனைவரிலும் மிக நுட்பமான உணர்ச்சி வாய்ந்தவர்." (ஜூலியஸ் ஸ்டாட்ஸ்கிலெவ் எழுதிய ஒரு தீர்க்கதரிசி தென் ஆப்பிரிக்காவுக்கு விஜயம் செய்கிறார் என்னும் புத்தகத்தில்).

**டாமி ஆஸ்பார்ன்:** "தேவன் தமது தாசர்களுக்கு தம்மை வெளிப்படுத்த வெவ்வேறு முறைகளையும் மனித ஞானத்துக்கு எட்டாத வழிகளையும் கையாண்டு வந்துள்ளார்- சிறப்பாக சகோ. பிரன்ஹாமைப் போன்று ஒரு பிரத்தியேக யுகத்திற்காக அவர் அழைத்தவர்களுக்கு.”

"சுருங்கக் கூறினால், வில்லியம் பிரன்ஹாம் என்று நாம் அறிந்துள்ள மனிதன், மாமிசத்தில் தேவனைமறுபடியும் காண்பிக்க (Demonstrate) அனுப்பப்பட்டவர்."

'எனவே தேவன். ஜனங்களின் கவனத்தைக்கவரவும், இந்த மாறுபாடான சந்ததி சற்று நின்று ஆழ்ந்து சிந்தித்து, ஆராய்ந்து நிதானிக்க வேண்டுமெனக் கருதி, இயற்கைக்கு மேம்பட்ட அடையாளங்களால் சூழ்ந்த ஒரு பிரத்தியேக மனித பாண்டத்தை அனுப்பினார். அவருடைய பிறப்பின் போது தோன்றின வட்டவடி வமான ஒளியும், நட்சத்திரமும், தூதனும், சிந்தனைகளைப் பகுத்தறிதலும், வரங்களும் ஆகிய இவையனைத்துமே இந்நோக்கத் திற்காகவே. எதற்காக? மறுபடியும் தேவனை நமக்குக் காண்பிக்க; இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வந்தபோது, அவரில் நமக்குக் காண்பித்தவைகளை மறுபடியும் காண்பிக்க; கடைசி முறையாக நம்மை ஞாபகப்படுத்த, உண்மையான மேசியா தோன்றிவிட்டார் என்று ஜனங்களை நம்பச் செய்ய இயேசு செய்த அதே காரியங்களை சகோ. பிரன்ஹாம் மறுபடியும் செய்தார்." (வில்லியம் பிரன்ஹாமின்

கொண்டு கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் (அநேகர் நினைப்பது போல் இது இருதயமல்ல) பரிதாபமான காட்சி சித்தரிக்கப்பட்டள்ளது. கவனியுங்கள், அந்த அழைப்பு தனிப்பட்ட நபருக்க விடுக்கப்படுகிறதேயன்றி (வெளி 3:20, "ஒருவன்"any man) வார்த்தையைப் புறக்கணித்த ஸ்தாபனங்களுக்கல்ல. இச்சிறு புத்தகத்தை படிக்கும் எந்த நபரும், மணவாளனுடைய சத்தத்தைக் கேட்டு அதற்கிணங்கி, மனிதனுடன் சம்பந்தப்பட்டுள்ள எல்லாவற்றிற்கும் வெளியே இருக்கும் அவருடன் சேர்ந்து, அவருடைய பரிபூரண வார்த்தைக்குள் பிரவேசிப்பாராக!

அவருக்கு விசுவாசமுள்ளவர்களாயிருந்து, தேவனுடைய சித்தத்தைச் செய்யும் கடைசி கால சிறுபான்மையோருக்கு, "ஏற்ற வேளையில் (ஆவிக்குரிய) போஜனம் கொடுக்கப்படும்" என்று இயேசு மத். 24:45ல் வாக்களித்துள்ளார். சத்தியத்தை விட்டு அகன்ற உலகத்தை விட்டு அவர் போய் விட்டாலும், அவர்களைப் போஷிக்க போஜனம் உண்டாகும் என்று அவர் வாக்களித்துள்ளார். சாறிபாத் விதவைக்கு எலியா போஜனமும் எண்ணெயும் அளித்தது போன்று, இக்கடைசிகால எலியாவும், மணவாட்டியை எடுத்துக் கொள்ளப்படுதலில் கொண்டு செல்வதற்காக ஒரு "செய்தி"யை வைத்து விட்டுப் போக வேண்டுமெனும் கட்டளையைப் பெற்றிருந்தார்.

("செய்தி" என்பதைக் குறித்து கடைசி பக்கத்தில் காண்க).

## சேர்ப்புரை I

## தூதர்கள்

"தூதர்கள்" (angels) என்பதின் கிரேக்க சொல், "செய்தியைக் கொண்டு வருபவர்கள்.'' (messengers) என்னும் அர்த்தங் கொண்டது. அது உலகிலுள்ள மனிதர், பரலோகத்திலுள்ள தேவதூதர்கள் ஆகிய இருவரையும் குறிக்க வேதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. லூக்கா 7:24லும், யாக்கோபு 2:25லும் அதே கிரேக்க சொல், "செய்தியைக் கொண்டு வருபவர்கள்'" என்னும் அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டு, மனிதர்களைக் குறிக்கின்றது.

ஸ்கோஃபீல்ட் (Scofield) என்பவரின் வேதாகமத்தில் எபி. 1:4க்கு கீழே அளிக்கப்பட்ட குறிப்பு (Foot note) கீழ்க் கண்டவாறு:

'தூதன்', சுருக்கம்: தூதன், அதாவது "செய்தியைக் கொண்டு வருபவன்" தேவனால் உபயோகிக்கப் பட்டவன். அது மனிதரையோ, அல்லது பலத்தையும் ஞானத்தையும் சிறப்பு தன்மைகளாகக் கொண்ட பரலோக சிருஷ்டிகளையோ குறிக்கலாம் (2சாமு 14:20; சங்.103:20, 104:4) பழைய ஏற்பாட்டில் காணப்படும் "கர்த்தடைய தூதன்" என்னும் சொல், தூதர்களின் உருவில் வந்த தேவனைக் குறிக்கிறது. (ஆதி. 16:1,13; 21: 17-19; 22:11-16; 31:11-13); (யாத். 3:2-4) (நியாயா. 2:1; 6:12-16; 13:3-22) நியாயாதிபதிகள் 2:1ன் குறிப்பினைக் காண்க. மல்கியா 3:1ன் குறிப்பினை ஒப்பிடுக. "தூதன்" என்னும் சொல் லூக் 7:24, கிரேக்கு; யாக்



அவர்களைக் காப்பாற்றினார். எனவே, அவரால் விவரிக்கக் கூடாத ஒரு வினோத பிரசன்னத்தினால் மாத்திரமே அந்நேரத்தில் அவர் குடிலுக்குச் செல்லக் கவரப்பட்டு, ஆறு மாதக் குழந்தையின் ஜீவனை அவரால் காப்பற்ற முடிந்தது.

சகோ பிரன்ஹாம் மூன்றாம் வயதில் தமது முதல் தரிசனத்தைக் கண்டார். அதன் விளைவாக, அவர்கள் அப்பொழுது கென்டக்கியில் தங்கியிருந்த போதிலும், ஒரு நாள் அவர்கள் நியூ ஆல்பனியில் தங்குவார்கள் என்று அவர் தாயிடம் கூறினார். சிறிது காலம் கழித்து அந்த குடும்பம் கென்டக்கியிலிருந்து ஒஹையோ நதியின் மறுபுறமுள்ள இந்தியானாவுக்குச் சென்று, அதற்கும் சிறிது காலம் கழித்து, ஒரு சில மைல்கள் தெற்கேயுள்ள இந்தியானாவிலுள்ள ஜெபர்ஸன்வில்லுக்கு சென்று தங்கினர். அது இந்தியானாவிலுள்ள நியூ ஆல்பனிக்கு சில மைல் தூரம் இருந்தது. அப்படியாக அந்த தரிசனம் நிறைவேறிற்று. ஏழு வயதில் சகோ. பிரன்ஹாமுக்கு மற்றொரு வினோத அனுபவம் உண்டானது. அவரால் அதை புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு நாள் அவர் தந்தைக்கு உதவி செய்து கொண்டிருந்தபோது, ஒரு பீப்பாயின் அளவிருந்த ஒரு புன்னை மரத்தின் கீழே கடக்க வேண்டயிருந்தது. அப்பொழுது அதிலிருந்து ஒரு சத்தம் அவருடன் பேசி, ''புகை பிடிக்காதே, மது அருந்தாதே, உன் சரீரத்தை அசுசிப்படுத்தாதே. நீ பெரியவனாகும் போது, நீ செய்ய வேண்டிய பணி ஒன்றுண்டு" என்றது. அந்த அதிசயமான சம்பவத்தை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. அது அவரில் பயமுண்டாக்கினது. அவர் தாயிடம் ஓடினார். அவரை பாம்பு கடித்து விட்டதாக தாய் முதலில் எண்ணினாள்; பின்பு, ஏதோ நரம்பு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கும் என்று நினைத்தாள். அவள் அவரைப் படுக்கையில் கிடத்தி, மருத்துவரை வரவழைத்தாள்.

அவருடைய ஒன்பதாம் வயதில், அவர் நண்பர் களுடன் விளையாடிக் கொண்டிருந்த போது, பாலம் ஒன்றை தரிசனத்தில் கண்டார். அது லூயிவில்லிருந்து ஜெபர்ஸன்வில் வரை ஒஹையோ நதிக்கு குறுக்கே கட்டப்பட்டிருந்தது. அவரால் அந்த பாலத்தைக் காண முடிகிறது என்று அவர் நண்பர்களிடம் கூறினார். ஆனால் அதன் ஒரு பாகம் இடிந்து விழுந்து பதினாறுபேர் உயிரிழந்ததை அவர் கண்டு பயந்து போனார். அவருடைய நண்பர்கள் இதை அங்கு தங்கியிருந்தவர்களிடம் அறிவித்தனர். இருபத்து இரண்டு ஆண்டுகள் கழித்து அந்த பாலம் கட்டப்பட்ட போது, பதினாறு பேர் உயிரிழந்தனர். இன்றைக்கும் அந்த பாலம் ஜெபர்ஸன்வில்லுக்கும் லூயிவில்லுக்கும் இடையேயுள்ளது.

அவர் வாலிபனாயிருந்தபோது, அவர் புகைபிடிக்காத காரணத்தால் ஒரு பெண் அவரை கேலி செய்தாள். அவளுடைய கேலியை நிறுத்த அவர் புகை பிடிக்க முயன்றார். அவர் கூறும் சாட்சி என்னவெனில், அவர் சிகரெட்டை எடுக்கக் குனிந்த போது, அந்த சுழல் காற்றின் சத்தத்தை அவர் மறுபடியும் கேட்டார். அவர் முயன்ற ஒவ்வொரு முறையும் அச்சத்தம் அதிகமாகிக் கொண்டே வந்து, முடிவில் அந்த

பலத்த சத்தம் அவரை பயமுறச் செய்ததது. இதனால் சகோ. பிரன்ஹாம் புகை பிடிக்கவேயில்லை.

மற்றொரு சமயம் ஒரு மனிதன் வாலிபனான வில்லியம் பிரன்ஹாமுக்கு, அவருடைய தந்தை முன்னிலையில் மது அருந்தக் கொடுத்தான். அவர் அருந்தப்போகும் சமயத்தில் அவருடைய தந்தை அவரை பெண்மைத்தனம் கொண்டவன் என்று அழைத்த காரணத்தால் அவர் மது அருந்த முற்பட்டார்- அந்த சுழல் காற்று மறுபடியும் வந்தது. அதன் பலத்த சத்தத்தை அவர் கேட்டார். அவர் குப்பியை உதடுகளின் அருகில் கொண்டு சென்றபோது, அச்சத்தம் மிகவும் அதிகமாகி, அவர் பயந்து ஓடிவிட்டார். அவர் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருக்கவில்லை- அவரால் கீழ்ப்படியாமல் இருக்க முடியவில்லை- ஏனெனில் தேவன் அவருடைய வாழ்க்கையில் ஒரு திட்டத்தை வைத்திருந்தார், அதை படிப்படியாக நிறைவேற்றி வந்தார்.

அவர் வாலிபனாயிருந்தபோது களியாட்டு காட்சி (Carnival) ஒன்றிற்கு சென்றிருந்தார். அங்கு குறிசொல்பவன் ஒருவன் அவரை அணுகி, “வாலிபனே ஒரு அடையாளம் உன்னை பின் தொடருகிறது என்று உனக்குத் தெரியுமா?” என்ற கேட்டான். பொல்லாத ஆவி இயேசுவினிடத்தில், "நீர் யாரென்று எங்களுக்குத் தெரியும். நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று கூறினதற்கு இது எவ்வளவு ஒத்ததாயுள்ளது. அக்காலத்து ஆசாரியர்களும் மதத்தலைவர்களும் - கிறிஸ்துவின் காலத்திலிருந்த, உலகில் தலை சிறந்த பக்திமான்கள்- கிறிஸ்துவை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ஆனால் பொல்லாத ஆவிகளோ அவர் யாரென்று கண்டு கொண்டன. அப்போஸ்தலனாகிய பவுல் பிரசங்கம் செய்ய தீயத்தீராவுக்கு சென்றிருந்த போது, அவன் வரவேற்கப் படவில்லை. அவன் சிறையில் அடைக்கப்பட்டான். ஆனால் குறி சொல்லும் வாலிப பெண் ஒருத்தி, "இவர் பவுல், கிறிஸ்துவை நமக்குப் போதிக்கிறவர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்” என்றாள். மற்றவகைள் இவனைத் துன்புறுத்த வகை தேடினபோது, அவளுக்குள் இருந்த அசுத்த ஆவி அவனை அடையாளம் கண்டு கொண்டது. அவ்வாறே இச்சந்ததியிலும் நிகழ்ந்தது. சகோ. பிரன்ஹாமில் வித்தியாசமான ஏதோ ஒன்று இருந்தது என்று இவ்வுலகில் மார்க்க சம்பந்தமானவர்கள் அங்கீகரிப்பதற்கு முன்பே, பொல்லாத ஆவிகள் அதை கண்டு கொண்டன.

சகோ. பிரன்ஹாம் தமது பதினான்காம் வயதில் ஏறக்குறைய மரித்தே போய் விட்டார். அவர் தற்செயலாக சுடப்பட்டு அவருடைய காலின் ஒரு பாகத்தில் தோட்டா பாய்ந்து, இரத்த வெள்ளத்தில் கிடந்திருந்து அந்நிலையில், அவர் ஒரு தரிசனம் கண்டார்- அல்லது ஒரு அனுபவத்தைப் பெற்றார். அவர் மறைந்து, ஜனங்களை நரகத்தில் கண்டார். 1960ம் ஆண்டிலிருந்து பத்து ஆண்டுகளுக்கு, உலகின் பெண்களிடையே நடக்கவிருக்கம் காரியங்களை அவர் கண்டார்- அவலட்சணமாக அலங்காரம் செய்து கொள்ளுதல் பொன்றவை.



விட்டது. தேவன் அவர்களைக் கைவிட்டு, வேசியின் மார்க்கத்துக்கும், மாற்ற முடியாத மிருகத்தின் முத்திரைக்கும் ஒப்படைத்து விட்டார் (வெளி. 13:15-18).

ஆயினும், தேவன் தாம் முன்குறித்தவர்களைக் கைவிட முடியாது. எனவே இந்த இருளான கடைசி கால காட்சியின் மத்தியலும் அவர் "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாத மகிமையுள்ள சபை" ஒன்றை வாக்களித்துள்ளார். (எபே 5:27).

மறுபடியுமாக தேவன் அழகான, ஆனால் மிகச் சிறிய மணவாட்டிக்காக ஒரு பேழையை ஆயத்தம் செய்துள்ளார். அவளுக்கு அளிக்கப்படும் அழைப்பு இருவகைப்படும். ஒன்று, "என் ஜனங்களே, அவளை விட்டு (ரோமபுரியையும் அவளுடைய குமாரத்திகளையும் விட்டு) வெளியே வாருங்கள்." (வெளி 18:4). ஜீவனுள்ள வார்த்தையாகிய "கிறிஸ்துவுக்குள் வாருங்கள்." (எபே 1:9). அவள் மாத்திரமே கிறிஸ்துவின் முன்னோடியை அடையாளம் கண்டு கொண்டு, அந்த மகத்தான மறுரூபமாகுதலுக்காக துரிதமாக ஆயத்தப்படத் தொடங்குவாள். மற்றவர்களோ, நவீன எழுப்புதல்கள் என்றழைக்கப்படும் இவைகளால் உலக சபைகள் ஆலோசனை சங்கத்திற்குள்ளும் (World Council of Churches) கேட்டுக்குள்ளும் கொண்டு செல்லப்படுவார்கள். இதுவே உண்மையில் கடைசி அழைப்பு - வேறொன்று இராது. யூதர்கள் தங்கள் சொந்த நாட்டை அடைந்து விட்டனர். மல்கியா 4: 5-6ல் கூறப்பட்டுள்ள எலியா வந்து போய்விட்டார். எடுத்துக் கொள்ளப் படுதலுக்காக இப்பொழுது அரங்கம் தயாராகி விட்டது.

வில்லியம் பிரன்ஹாமின் பிரசங்கங்கள் அடங்கிய திரளான ஒலிநாடாக்களும் புத்தகங்களும் உலகம் முழுவதும் விநியோகம் செய்யப்பட்டு விட்டன. ஒவ்வொரு தேசத்திலும் தேவன் சபைகளை எழுப்பியுள்ளார், ஆயிரக்கணக்கானோர், இப்பொழுதும் பேசிக் கொண்டிருக்கும் தீர்க்கதரிசியின் சத்தத்தின் மூலம் (வெளி 10:6) பாவத்தினின்றும், உலகத்தினின்றும், ஸ்தாபன முறைமை களிலிருந்தும் விடுதலையாகி வேதத்தின்படி நடந்து வருகின்றனர். நீங்கள் எந்த ஒரு ஸ்தாபனத்திலாகிலும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் பட்டப்பெயர்களினால் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், மறுபடியும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற வேண்டியவர்களாயிருக்கிறீர்கள் (அப் 19:1-5). தேவனுடைய வார்த்தையைப் பின்பற்றாமல் தேவனைப் பின்பற்ற முடியாதென்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் உணர வேண்டும். அவருடைய கற்பனைகளின் மேல் நாம் கொண்டுள்ள அன்பினால் மாத்திரமே நாம் அவர் பேரில் கொண்டுள்ள அன்பு அளிக்கப் பட்டு, அதுவே அதன் சான்றாக அமைக்கின்றது (யோவான் 14:15). அவர் திரை நீக்கப்பட்டு தமது வார்த்தையில் வெளிப்படுவதை நாம் காண்பதன் மூலமே அவரை நாம் அறிந்து கொள்ள முடியும். லவோதிக்கேயா சபையின் காலத்தில் (வெளி 3:14-22), இயேசு கிறிஸ்து சபைக்கு வெளியே நின்று

இன்றைய சுவிசேஷ உலகிலே, பரிசுத்தத்திலிருந்து கவனம் எடுக்கப்பட்டு, பணத்தின் மேல் அதிக கவனம் செலுத்தப் படுகின்றது. உலகப் பிரசித்தி பெற்ற பிரசங்கிமார்கள் வகுத்த. திட்டங்களை செயல்படுத்த கோடிக்கணக்கான டாலர்கள் செலவிடப்படுகின்றன. ஒருவர் கூட்டத்தில் கலந்து கொள்ளும் போதும், வானொலியில் சுவிசேஷ ஒலிபரப்பைக் கேட்கும் போதும், விடுதிகள் ஆஸ்பத்திரிகள் வானொலி ஒலிபரப்பு, கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவைகளை நடத்த பெரிய தொகைகள் வழங்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுவிக்கப் படுவதை கேட்காமல் இருக்க முடியாது. இதற்கு செவிசாய்ப்பவர்கள், பிரம்மாண்டமான சொத்துக்கள் வாங்க பண உதவி செய்வதற்கும், உலகம்பூராவும் பரம்பியுள்ள ஸ்தாபனங்களை ஆதரிப்பதற்கும், நிர்ப்பந்தம் செய்யப்படுகின்றனர்.

இவைகளோடு கூட, ஆண்களும் பெண்களும் ஒன்றாக நீச்சலில் கலந்து கொள்ளுதல், பெண்கள் குறைவாக உடை உடுத்திக் கொள்ளுதல், சமூக மது அருந்துதல், புகை பிடித்தல், வாலிப ஆண்களும் பெண்களும் கட்டித் தழுவிக் கொஞ்சுதல் போன்றவை சபைகளின் அங்கீகாரம் பெற்றுள்ளன.

இந்நாட்களை லோத்தின் நாட்கள் என்றும், நோவாவின் நாட்கள் என்றும் இயேசு குறிப்பிட்டார். அந்நாட்களில் எங்கும் பரவியிருந்த பாவம், ஒழுங்கற்ற விதத்தில் இனச் சேர்க்கையும், முடிவில் பரிபூரணமான ஒழுங்கற்ற தன்மையுமே, இக்காலத்து ஆண்களின் பெண்களின் நடத்தையையும், உடுக்கும் விதத்தையும், காணப்படும் விதத்தையும் விவரிக்க, 'ஒரே இனம்' (unisex) என்னும் சொல் உபயோகிக்கப்படுகின்றது. கடந்த 20 ஆண்டுகளாக, இந்நிலை மோசமாகிக் கொண்டே வந்து, தற்பொழுது ஆண்களும் பெண்களும் தங்கள் பங்கை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொண்டுள்ளனர். பெண்கள் ஆண்களைப் போல் தலைமயிரைக் கத்தரித்து, ஆண்களின் உடைகளை உடுத்து, சம உரிமை கோரி, தாய்மைத்துவத்தையும் வீடு பராமரிப்பையும் நிராகரித்து, வேலையில் அமர்ந்துள்ளனர். ஆண்களும் நடத்தை கெட்டு ஒழுங்கற்று பெண்களைப் போல் தலைமயிரை நீளமாய் வளர்த்து அழகுபடுத்தும் விடுதிகளுக்குச் சென்று தங்களை அழகுபடுத்தி, பெண்களின் ரவிக்கைகளை போன்ற 'ஷர்ட்'டுகளை அணிந்து, எல்லாம் காணும்படியாக இறுக்கமான கால்சட்டை அணிந்து, உயரமான காலணிகளை போட்டுக் கொண்டு, கழுத்தில் ஆபரணத்தை அணிந்து, காதுகளில் தொங்கல்களை மாட்டிக் கொள்கின்றனர்.

சபைகள், இத்தகைய தாறுமாறான சீர்குலைதலைத் தடுத்து நிறுத்துவதற்குப் பதிலாக, அதற்கிணங்கி, உடை, பாவனை, இசை, கேளிக்கை போன்ற காரியங்களில் சம்மதம் தெரிவித்து, அவைகளை ஏற்றுக் கொண்டு விட்டன. இதன் விளைவாக தேவன் அவிசு வாசியின் பங்கை அவர்களுக்கு அளித்து விட்டார். 'இக்கபோத்' என்பது, நன்கு அலங்கரிக்கப்பட்ட அவர்களுடைய தலை வாசல்களில் செதுக்கப்பட்டு



இப்பெண்கள் நரகத்தில் இருந்தனர். அப்படிப்பட்ட ஸ்தலம் ஒன்றுள்ளது என்பது அவருக்கு அதிர்ச்சியை விளைவித்தது. இருப்பினும் தேவனுடைய அழைப்பை அவர் எதிர்த்தார்.

தேவன் தொடர்ந்து அநேக ஆண்டுகள் அவருடன் ஈடுபட்டுக் கொண்டே வந்தார். ஏனெனில் அவர் பெரிதாகும்போது, அவர் செய்வதற்கு ஒரு வேலை அவருக்கிருந்தது.

1927ம் ஆண்டில், தம் பத்தொன்பதாம் வயதில் அவர் மேற்கே அரிசோனாவிலுள்ள பீனிக்ஸுக்கு சென்றார். அங்கு ஒரு பண்ணையில் வேலை செய்து கொண்டிருந்த போது, அவருடைய சகோதரன் எட்வர்ட் என்பவரின் மரணச் செய்தி அவருக்கு கிடைத்தது. அவருக்கும் எட்வர்ட்டுக்கும் அதிக வயது வித்தியாசமில்லை. எட்வர்ட்டின் மரணத்தைக் குறித்து அவர் கேட்ட போது, அவர் நின்று வறண்ட நிலத்தை நோக்கியவாறு, எட்வர்ட் தேவனை சந்திக்க ஆயத்தமாயிருந்தாரா என்னும் கேள்வியை தம்மையே கேட்டுக் கொண்டார். சவ அடக்கத்திற்காக அவர் ஜெபர்ஸன்வில்லுக்கு பயண மானபோது, "நீ ஆயத்தமாயிருக்கிறாயா?" என்னும் கேள்வி அவருக்குள் எழுந்தது. அடக்கத்தின் போது அவர் பெற்றோர் கதறி அழுததை அவர் நினைவு கூர்ந்தார். அது அவருடைய வாழ்க்கையில் ஒரு பெரிய பாதிப்பை உண்டாக்கி, தம்மைக் குறித்து அவர் யோசிக்கத் தொடங்கினார், இவர் குழந்தையாயிருந்த முதற்கே ஒரு சத்தம் - ஒரு பிரசன்னம்- அவருடன் பேச விருப்பங் கொண்டிருந்தது என்னும் அனுபவத்தை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அது அவர் வயதுள்ள பையன்களிட மிருந்து அவரைப் பிரித்து, அவர்களுடைய நட்பைத் தடுத்தது. ஏனெனில் அவர் விசித்திரமான காரியங்களைப் பேசி, மற்ற பையன்கள் செய்து வந்த புகை பிடித்தல், மது அருந்துதல்; நடனமாடுதல் பெண்களுடன் திரிதல் போன்றவைகளில் ஈடுபடாமல் இருந்தார். அவர்களைப் போல் அவர் தமது வாழ்க் கையை அமைத்துக் கொள்ளவில்லை. ஆயினும், தம்மை எவ்வாறு தேவனிடத்தில் சமர்ப்பிப்பது என்பதை அவர் அறியாதவராய் இருந்தார். ஆனால் எட்வர்ட்டின் மரணத்துக்குப் பின்பு, தேவ ஆவியானவர் அவருடன் தொடர்ந்து இருந்து வந்து, அவர் ஜெபம் செய்ய முயலும் நிலைக்கு அவரைக் கொண்டு வந்தார். அவருக்கு எப்படி ஜெபம் செய்வதென்றே தெரியவில்லை. அவர் காடுகளை நேசித்தவர். எனவே அவர் காகிதத்தில், "தேவனே, எனக்குதவி செய்யும்" என்று எழுதி அதை ஒரு மரத்தில் ஒட்டினார். தேவன் இயற்கையில் இருக்கிறார் என்பதை அவர் அறிந்திருந்தார்.

முடிவில் ஒரு நாள் வந்தது. அன்று அவர் ஓரிடத்திற்கு சென்று முழங்கால்படியிட்டு, எப்படி ஜெபம் செய்வதென்று அப்பொழுது அவர் அறியாமலிருந்த போதிலும், எளிமையாக அழத் தொடங்கினார். வானத்தின் பலகணிகளைத் திறக்க அது போதுமானதாயிருந்தது. அப்பொழுது ஆயிரம் பவுண்டு எடை அவருடைய தோளிலிருந்து எடுபட்டது போன்று தோன்றினதாக அவர் கூறினார். அவர் பெற்ற

அளவில்லாத மகிழ்ச்சியையும், பாரம் எடுபட்டதையும் எப்படி தெரிவிப்பது என்று அறியாதவராய், அவர் எழுந்து நின்று, குதித்து ஓடத் தொடங்கினார். அவர் வீட்டிற்குள் ஓடினபோது அவருடைய தாய் குழப்பமுற்று அவருக்கு என்ன நேர்ந்ததென்று கேட்டாள். அவர், "எனக்குத் தெரியாது. நான் இலகுவாக இருப்பதாக உணருகிறேன்" என்று விடையளித்தார். அவர் வீட்டிலிருந்து வெளியே ஓடி சாலையிலும் ஓடி அவருடைய மகிழ்ச்சியை அவ்விதம் தெரிவித்தார்.

பின்னர், அவர் பொது நிர்வாகக் கம்பெனியில் பணியாற்றியபோது, விஷ வாயு அவரைத் தாக்கி அவருடைய உடம்பில் விஷமேறினது. அவர் மிகவும் நோய்வாய்ப்பட்டார். அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அப்பொழுது மறுபடியும் அவர் இவ்வுலகை ஏறக்குறைய விட்டு சென்று விட்டார். அவருடைய நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. அப்பொழுது இயற்கைக்கு மேம்பட்ட ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு ஒளி உள்ளே நுழைந்து அவருக்கு முன்னால் தொங்கினது. அவர் பிழைப்பார் என்னும் நம்பிக்கையே மருத்துவர்களுக்கு இல்லை. ஆனால் அவர் பிழைத்தபோது, ஒரு மருத்துவர் அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவருடைய அறைக்குள் வந்து, "நிச்சயமாக தேவன் இந்த பையனைச் சந்தித்தார்" என்றார். சகோ. பிரன்ஹாமும், அச்சமயம் என்ன நிகழ்ந்ததென்று அவருக்குத் தெரியாதென்றும் அவர் பின்பு அறிந்ததை அப்பொழுதே அறிந்திருந்தாரானால், கர்த்தரின் நாமத்தில் சுகமடைந்தவராய் படுக்கையை விட்டு குதித்து எழுந்திருந்திருப்பார் என்றும் கூறினார். அவர் மருத்துவமனையை விட்டு வெளியே வந்த பின்பு, தேவனுடன் ஒரு ஆழ்ந்த அனுபவத்தை நாடினார். ஏனெனில் ஒரு பெரிய காரியத்தை தேவன் அவருக்குச் செய்ததை அவர் உணர்ந்தார்.

மற்றொரு முறை அவர் ஜெபத்திற்காக மரக்குடிலில் முழங்கால் படியிட்டிருந்த போது, ஒரு ஒளி தோன்றி, சிலுவை வடிவை அடைந்தது. அப்பொழுது ஏதோ ஒன்று அவரை ஆட்கொள்ளத் தொடங்கினது. அவர் அதுவரை அறிந்திராத ஒரு நேர்த்தியான உணர்ச்சியைப் பெற்றார். அது மழையைப் போல் அவருடைய சரீரத்தில் விழுந்ததாக அவர் ஒரு முறை என்னிடம் கூறினார்.

பின்பு, ஒரு கூட்டத்தினர், சுகம் பெறுவதற்காக கைகளை வைத்து ஜெபிப்பதில் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்று அவர் கேள்விப்பட்டார். அவர்களுடைய கூட்டத்தில் யாரோ ஒருவர் அவர் மேல் கைகளை வைத்தார். அப்பொழுது வாயு தாக்குதலின் காரணமாக அவருக்கு ஏற்பட்டிருந்த வயிற்று கோளாறிலிருந்து அவர் உடனே குணமடைந்தார்.

### அவருடைய ஊழியம் தொடங்குகிறது

அற்புதமாக அவர் சுகம் பெற்ற பின்பு, அவர் முதலில் பிரசங்கம் செய்யத் தொடங்கினார், அவருடைய முதலாம் கூட்டம் முதற்கொண்டே ஜனங்கள் ஞானஸ்நானம் பெற்றனர். 1933ம் ஆண்டு



## நான்காம் அத்தியாயம்
## ஒருவன் என் சத்தத்தை கேட்டால் "இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்"
**(வெளி.3:20)**

கிறிஸ்துவின் வருகைக்கு ஒரு சபையை ஆயத்தப்படுத்த பரிசுத்த ஆவி இரு திட்டவட்டமான காரியங்களைச் செய்ய வேண்டிதாயுள்ளது. முதலாவதாக, ஏற்கனவே கூறினபடி, தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தேவனுடைய கலப்படமற்ற வார்த்தைக்கு கொண்டு வரப்பட்டு, நூற்றுக்கணக்கான ஸ்தாபனங்கள் உபதேசங்களில் செய்துள்ள கலப்பை சரிபடுத்த வேண்டியது மிகவும் அவசியமாயுள்ளது. மேலும் இக்கடைசி கால மணவாட்டிக்கு முக்கியமாக உள்ள வேதத்திலுள்ள அநேக காரியங்கள் தெளிவாகப் போதிக்கப்படவில்லை. மத் 13:24-30, 36-43 வசனங்களில் கூறப்பட்டுள்ள கோதுமை மணியையும் களையையும் அடையாளம் கண்டுகொள்வதும், 2 தெச 2, 4ல் உரைக்கப்பட்டுள்ள அந்திக்கிறிஸ்து யாரென்று அறிந்து கொள்வதும், எடுத்துக் கொள்ளப்படுதலில் யாரென்று அறிந்து கொள்வதும், எடுத்துக் கொள்ளப்படுதலில் அடங்கியுள்ள இரகசியங்களை அறிந்து கொள்வதும், வெளிப்படுத்தின விசேஷத்தில் காணப்படும் இரகசியங்களையும் இன்னும் மற்றவைகளையும் அறிந்து கொள்ளுதலும் அவசியமாயுள்ளது. இதற்காகவே தான் “கர்த்தர் உரைக்கிறதாவது" என்பதால் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு தீர்க்கதரிசி முன்னோடி மிகவும் அவசியம். நீங்கள் கவனிப்பீர்களானால், இயேசுவின் முதல் முன்னோடியாகிய யோவான் ஸ்நானன் மாத்திரமே ஏசா 40:1-3 போன்ற வேத வாக்கியங்களை அடையாளங்கண்டு கொள்ள முடிந்தது. அது அவன் காலத்தில் நேரடியாக நிறைவேறினது. அவன் மாத்திரமே வரப் போகும் ஆட்டுக்குட்டியானவரை அடையாளங்கண்டு கொள்ள முடிந்தது. அது போன்று கடைசி கால எலியாவின் ஊழியத்திலும், திரளான வேதவாக்கியங்கள் அவருடைய காலத்தில் நிகழும்.

இரண்டாவது காரியம், ஜனங்களின் நடத்தையைக் குறித்ததாகும். யோவான்ஸ்நானன், அவன் காலத்து குருவானவர்களின் பாரம்பரியங்களைக் கடிந்து கொள்வதோடு விட்டு விடாமல், மனந்திரும்புதலுக்கும் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதற்கும் அழைப்பு விடுத்தான் என்பதை நீங்கள் கவனிக்கலாம். அநேக ஆண்டுகளாக சபைகள், தாங்கள் கடைப்பிடித்திருந்த பரிசுத்த நிலையைத் தளர்த்திக் கொண்டே வந்து, முடிவில் இக்காலத்தில் ஜனங்களின் நடத்தை உலகத்தாரின் நடத்தைக்கு முழுவதும் ஒத்ததாகி விட்டது.

என்னைக் கண்டு பிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்று போடுவானே என்றான்." (ஆதி 4:5,9,13,14).

காயீன், ஆபேல், சேத் இவர்கள் பிறந்த விதம் வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. "ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி காயீனைப் பெற்று கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள். பின்பு அவனுடைய சகோதரனா கிய ஆபேலைப் பெற்றாள்" (ஆதி 4:1-2).

"பின்னும் ஆதாம் தன் மனைவியை அறிந்தான். அவள் ஒரு குமாரனைப் பெற்று அவனுக்குச் சேத் என்று பேரிட்டாள்" (ஆதி 4:25). ஆதாமின் இரு புணர்ச்சிகளின் காரணமாய் மூன்று குமாரர்கள் பிறக்கின்றனர். தேவனில் சத்தியமான வார்த்தைகளே வேதத்தில் அடங்கியிருப்பதால், மேற்கூறியது தவறாக எழுதப்பட்டிருக்கிறது என்று கூறமுடியாது. இதன் அர்த்தத்தை ஆவியானவர் பின்னர் வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு அவ்விதமாகவே குறிக்கப்பட்டிருக்கிறது. ஆதாமின் இரு செய்கைகளினால் மூன்று குமாரர்கள் பிறந்ததால், ஒருவன் ஆதாமின் குமாரனல்ல. உண்மை உண்மை என்னவெனில், சர்ப்பத்தின் குமாரனும் (காயீன்), ஆதாமின் குமாரனும் (ஆபேல்) இரட்டைக் குழந்தைகளாக ஏவாளின் கர்ப்பத்தில் வளர்ந்தனர். ஆபேல் உண்டாவதற்கு சிறிது காலம் முன்பு காயீன் ஏவாளின் கர்ப்பத்தில் உண்டானான். இது சாத்தியமல்ல என்று எண்ணுபவர்கள், மருத்துவக் குறிப்புகளை (Medical Reports) படிக்க வேண்டும். சமீகத்தில் நார்வே (Norway) தேசத்திலிருந்த ஒரு ஸ்திரீ, இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்தாள். அவைகளில் ஒன்று கறுப்பு நிறமாகவும் மற்றொன்று சிவப்பாகவும் இருந்தன. அவளுடைய நடத்தையைச் சந்தேகித்த கணவன் அவளை விவாகரத்து செய்தான். அவளுக்கு ஒரு நீக்ரோ காதலனிருந்ததாக அவள் நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டாள். ஒரு கர்ப்பம் உண்டான மூன்று வாரங்கள் கழித்து மற்றொரு கர்ப்பம் அவளுக்கு உண்டாயிற்று என மருத்துவர் கூறினர். 1936 வருஷத்தில் டெக்ஸாஸ் (Texas) பட்டணத்திலுள்ள போமாண்ட் (Beaumont) என்னும் ஸ்தலத்தில் தங்கியிருந்த ஒரு பெண் இரண்டு வித்தியாசமான சமயங்களில் கர்ப்பமுற்றாள். முதல் பிரசவத்தில், மற்றொரு குழந்தை கர்ப்பத்திலுள்ளவாறே ஏறக்குறைய மரித்தாள்.



ஜூன் 11ம் தேதியன்று நிகழ்ந்த ஞானஸ்நான ஆராதனையின் போது வேறொரு இயற்கைக்கு மேம்பட்ட சம்பவம் நிகழ்ந்தது.

அன்று சகோ. பிரன்ஹாம் ஜெபர்ஸன்வில்லிலுள்ள ஸ்பிரிங் தெருவின் ஓரத்தில் ஓஹையோ நதியில் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த போது, நட்சத்திரத்தைப் போன்ற விசித்திரமான ஒளி சுழன்று கொண்டே இறங்கி வந்து அவருடைய தலையின் மேல் தொங்கினது. அப்பொழுது ஏறக்குறைய நாலாயிரம் பேர் கரையில் உட்கார்ந்து கொண்டு கவனித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் அநேகர், விவரிக்க முடியாத இந்த காட்சியைக் கண் கூடாகக் கண்டனர். சிலர் பயந்து ஓட்டம் பிடித்தனர். மற்றவர்கள் ஆராதிக்க சாஷ்டாங்கமாய் விழுந்தனர். அநேகர் இந்த குறிப்பிடத்தக்க சம்பவத்தைக் குறித்துச் சிந்தனை செய்யத் தொடங்கினர். சவுலிடம் பேசினது போல, ஒரு சத்தம் அந்த ஒளியிலிருந்து உண்டாகி, "கர்த்தருடைய முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல. அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக நீ அனுப்பப்பட்டிருக்கிறாய்" என்றது.

## ஏழு தீர்க்கதரிசன தரிசனங்கள்

சகோ. பிரன்ஹாமுக்கும் அவருடைய செய்தியைப் பின்பற்றினவர்களுக்கும் 1933ம் ஆண்டு ஒரு முக்கியமான வெளிப்பாட்டின் சமயமாயிருந்தது.

அந்த ஆண்டு ஜூன் மாதத்தில் சகோ. பிரன்ஹாம் ஜெபர்ஸன்வில்லிலுள்ள மெக்ஸ் அவென்யூ என்னுமிடத்திலிருந்த மேசன்களின் பழைய கூடத்தில் ஆராதனை நடத்திக் கொண்டிருந்த போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன்பு நிகழவிருக்கும் ஏழு முக்கியமான சம்பவங்கள் அவருக்கு வெளிப்படுத்தப் பட்டது. அந்த ஜூன் காலை, அவர் பிரசங்கத்தை ஆரம்பிப்பதற்கு முன்பு, இத்தரிசனங்கள் அவருக்குத் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டன.

முதலாவதாக தோன்றின தரிசனம், இத்தாலியாவின் சர்வாதிகாரி முசோலினி எத்தியோப்பியாவின் மீது போர் தொடுப்பான் என்பதே. அதில் பேசின சத்தத்தின் படி, எத்தியோப்பியா முசோலினியின் கைகளில் விழும். இருப்பினும், அந்த சர்வாதிகாரியின் முடிவு பயங்கரமாயிருக்கும் என்று அச்சத்தம் தொடர்ந்து கூறினது. அவன் பயங்கர மரணம் எய்தி, அவன் சொந்த ஜனங்கள் அவன் மேல் துப்புவார்கள் என்று அது முன் னறிவித்தது. இவை யாவும் நிறைவேறி, இப்பொழுது அது சரித்திரமாகிவிட்டது.

அடுத்த தரிசனம், உலக மகாயுத்தத்தில் அமெரிக்கா, ஆஸ்திரியா நாட்டு தலைவன் ஒருவனைக் கொண்ட ஜெர்மனிக்கு எதிராக போரில் ஈடுபடும் என்பதைக் காண்பித்தது. இந்த பயங்கரமான போரில் அந்த தலைவன் தோல்வியடைவான் என்றும், அவன் மர்மமான முடிவை அடைவான் என்றும் அது முன்னறிவித்தது. இத்தரிசனத்தில் சகோ.

பிரன்ஹாமுக்கு சிக்ப்ஃரீட் எல்லை, அது கட்டப்படுவதற்கு அநேக ஆண்டுகட்கு முன்பே காண்பிக்கப்பட்டது.

மூன்றாம் தரிசனம், இவ்வுலகில் பாசீசம், நாசீசம், கம்யூனிஸம் என்னும் மூன்று கொள்கைகள் எழும்பியுள்ளன என்றும், முதலிரண்டும் ஒன்றுமற்றதாகி கம்யூனிஸம் தழைக்கும் என்றும் காண்பித்தது. எதிர்கால நிகழ்ச்சிகளின் விவகாரத்தில், ருஷியாவின் மேல் கண்ணோட்டமாக இருக்க வேண்டுமென்று அது அறிவுறுத்தி, “ருஷியாவைக் கவனி, அது மகத்தான உலக நாடாகும்” என்ற கூறினது.

நான்காம் தரிசனம், யுத்தத்திற்கு பின்பு விஞ்ஞானத்தில் ஏற்படவிருந்த முன்னேற்றத்தை அறிவித்தது. அத்தரிசனத்தில் அவர், முட்டை வடிவம் கொண்ட மோட்டார் வாகனங்கள் அமெரிக்காவின் நெடுஞ்சாலைகளில் ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டார். இன்றைய ஃபோக்ஸ் வாகன் வாகனங்களின் விளம்பரங்கள், அவைகளை முட்டை வடிவத்திற்கு ஒப்பிட்டு, "சில வடிவங்களை இன்னும் விருத்தியாக்கலாம்" என்று கூறுவதை நீங்கள் கவனிக்க விரும்புகிறேன். 1933ம் ஆண்டில், இத்தகைய வடிவம் கொண்ட மோட்டார் வாகனங்கள் உண்டாக்கப்பட வேயில்லை. அவர் மேலும், கொப்பள வடிவில் அமைந்துள்ள கூரையைக் கொண்ட மோட்டார் வாகனம் தானாகவே இயங்கி நெடுங்சாலையில் ஓடிக் கொண்டிருப்பதையும், ஓட்டுநர் பின்பக்கத்திலிருந்தவர்களுடன் அமர்ந்து கொண்டு, ஒருவிதமான விளையாட்டு விளையாடிக் கொண்டிருப்பதையும் தரிசனத்தில் கண்டார். அந்த மோட்டார் வாகனத்துக்கு திருப்பும் சக்கரம் (steering wheel) இருக்கவில்லை, இன்று எலெக்ட்ரானிக்ஸால் இயங்கும் மோட்டார் வாகனங்கள் உள்ளன. 1952ம் ஆண்டில் நடைபெற்ற சர்வதேச கண்காட்சியில் அவை பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

ஐந்தாம் தரிசனம், உலகத்தின் பெண்களைக் குறித்ததாகும். ஸ்திரீகளின் நடத்தையில் விரைவாக அழிவு ஏற்படுமென்றும், அது அவர்கள் ஓட்டுரிமையைப் பெற்று, உலக விவகாரங்களில் ஈடுபட்டு, அதன் மூலம் சுயாதீனத்தைப் பெற்ற அன்று முதற் கொண்டே தொடங்கும் என்றும் அந்த தரிசனத்தில் காண்பிக்கப் பட்டது. அவர்களுக்கு அளிக்கப்பட்ட இந்த ஓட்டுரி மை, அமெரிக்காவின் பெண்கள் ஒரு 'பையன்' ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கக் காரணமாயிருக்கும் என்பதையும் அவர் கண்டார். (பெண்கள் அளித்த வாக்குகளின் மூலம் ஜாக் கென்னடி ஜனாதிபதி தேர்தலில் வென்றார் என்பது நினைவிருக்கட்டும்). முடிவில் அந்த தரிசனம், பெண்கள் உடைகளைக் களைந்து ஏறக்குறைய நிர்வாணமாயுள்ளதையும், அத்தி இலை அளவுள்ள ஒரு துணியினால் மாத்திரம் தங்களை மறைத்துக் கொண்டுள்ளதையும் காண்பித்தது.

ஆறாம் தரிசனத்தில், அமெரிக்காவில் ஒரு அழகான பெண் எழும்பினாள். அவள் சிறப்பான ராஜ உடை உடுத்தியிருந்தாள். அவளுக்கு மிகுந்த அதிகாரம் அளிக்கப்பட்டது. காண்பதற்கு அவள்



வருடைய குமாரன் எனப்படுவார்; கர்த்தாரகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடுப்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான். அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்" (லூக்கா 1:26-35). இதே வசனங்கள் சர்ப்பத்தின் வித்து எவ்வாறு இவ்வுலகத்தில் தோன்றியது என்னும் வெளிப்பாட்டையும் கொடுக்கின்றன.

'ஸ்திரீயின் வித்து' என்பது தேவன் தமக்கு மனிதரூ பத்தை உண்டாக்கிக் கொண்டதைக் குறிக்கிறதென்று மேற்கூறிய வசனங்கள் மூலம் அறியலாம். அவ்விதமாகவே 'சர்ப்பத்தின் வித்து' சாத்தான் மானிடவர்க்கத்தில் நுழைந்த விதத்தைக் குறிக்கிறது. சாத்தான் கர்த்தரால் சிருஷ்டிக்கப்பட்ட ஆவியாயிருப்பதால், தேவனைப் போன்று தனக்கென ஒரு சரீரத்தை உண்டாக்கிக் கொண்டு மனிதரிடையே வெளிப்பட முடியாது. ஆகையால் மானிடவர்க்கத்தோடு அவன் தொடர்பு கொள்ள வேண்டுமாயின், எவ்வகையிலாகிலும் தன்னுடைய வித்தை மனிதரில் நுழைக்க வேண்டும். இவ்வாறு அவன் செய்து வெற்றிபெற்ற சம்பவத்தைத்தான் ஆதியாகமம் எடுத்துரைக்கிறது. சாத்தானைச் 'சர்ப்பம்' என்று வேதம் அழைக்கிறது 'சர்ப்பத்தின் வித்து' மானிட வர்க்கத்தில் நுழைந்த தெனில், சாத்தானின் வித்து மனிதரில் நுழைந்ததென அர்த்தம்.

ஆதாம் ஏவாளை அறியும் முன்பு, சர்ப்பம் அவளை அறிந்தது. அதன் மூலம் தோன்றியவனே காயீன். காயீன் "பொல்லாங்கானவனால்” உண்டானான் என்று யோவான் கூறுகிறான். (1 யோவான் 3:12). காயீன், ஆதாமின் குமாரனாயிருந்தால், ஆதாம் பொல்லாங்கானவனாயிருக்க வேண்டும். அப்படியெனில் வேதம் அவனை எங்ஙனம் 'தேவனால் உண்டானவன்' (லூக்கா 3:38) என்று கூறமுடியும்? வேத வாக்கியங்களை அருளிய பரிசுத்த ஆவியானவர் இவ்வாறு முரண்பாடான சத்தியங்களை ஒருக்காலும் கொடுக்க மாட்டார். ஆகையால் காயீன் பொல்லாங்கான சாத்தானின் மூலம் இவ்வுலகத்தில் தோன்றினான். தன் தகப்பனின் சுபாவத்தைப் பெற்று, அவன் கொலையாளியானான்; சாத்தான் தேவனை எதிர்த்ததைக் காட்டிலும் அவனுடைய குமாரனாகிய காயீன் எதிர்த்துக் போராடினான். ''காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது. கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார். அதற்கு அவன்: நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ" என்றான். அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி; எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்க முடியாது. இன்று என்னை இந்தக் தேசத்திலிருந்த துரத்தி விடுகிறீர்; நான் உமது சமூகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்;

அதிகமிருந்ததால், அதன் வித்து ஸ்திரீயின் வித்தோடு கலக்கவும், அதனால் ஸ்திரீ கர்ப்பிணியாகவும் சாத்தியமாயிருந்தது. இவ்வாறு ஏவாள் கற்பழிக்கப்பட்ட போது. தேவன் சர்ப்பத்தைச் சபித்தார். சர்ப்பத்தின் தேகத்திலுள்ள ஒவ்வொரு எலும்பையும் அவர் மாற்றினதால், அது பாம்பைப் போல் ஊர்ந்து போகவேண்டியதாயிற்று. மனிதன் ஞானமுள்ளவனானதால், மிருகத் திற்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பைக் கண்டு பிடிக்க அவனால் முடிந்தது. குரங்கிலிருந்து மனிதன் உண்டானான் என்னும் தத்துவத்தை (Theory of Evolution) நிரூபிக்க அவன் முயல்கிறான். ஆனால் மனிதனுக்கும் குரங்குக்கும் இடையேயுள்ள இணைப்பை (missing link) அவன் ஒரு போதும் கண்டுபிடிக்க இயலாதபடி தேவன் செய்துவிட்டார். குரங்கிலிருந்து மனிதன் உண்டாகவில்லை. ஆனால் மிருகம் மனிதனோடு கலந்தது. ஏதேன் தோட்டத்தில் நிகழ்ந்த இந்த சம்பவம் இத்தனைக் காலமாக மறைவாயிருந்தது. இப்போது அது நமக்கு வெளிப்படுகிறது. இதன் மூலம் ஏவாள் ஜீவனைப் புறக்கணித்து மரணத்தை ஏற்றாள்.

ஏதேன் தோட்டத்தில் தேவன் சர்ப்பத்தினிடம் கூறியதைக் கவனியுங்கள்: "உனக்கும் ஸ்திரீக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்கு வேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்." (ஆதி 3:15). இவ்வாக்கின் மூலம் ஸ்திரீக்கு வித்துண்டு என்று நாமறிவோமானால், சர்ப்பத்திற்கும் வித்துண்டு என்பதை நாம் ஆமோதிக்க வேண்டும். ஸ்திரீயின் வித்து, மனிதப் புணர்ச்சியின்றி தோன்றி ஆண்குழந்தையாயிருப்பின், சர்ப்பத்தின் வித்தும் மனிதனின் சம்பந்தமின்றி தோன்றிய ஒரு ஆண் குழந்தையாயிருக்க வேண்டும். ஸ்திரீயின் வித்து ஆண் பெண் தொடர்பின்றி பரிசுத்த ஆவியினால் உண்டாக்கப்பட்ட கிறிஸ்து என்று யாவருமே அறிந்த ஓர் உண்மை. ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என்று தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தைக் கிறிஸ்து, சிலுவையின் மரணத்தினால் சாத்தானைத் தோற்கடித்து, நிறை வேற்றினார். சிலுவையில் சாத்தானின் தலை நசுக்கப் பட்டது; சாத்தானும் யேசுவின் குதிங்காலை நசுக்கினான்.

ஸ்திரீயின் வித்து, மனிதனின் தொடர்பின்றி, எவ்வாறு மனித ரூபத்தில் தோன்றியது என்பதை வேதம் விவரிக்கிறது. "ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத் தென்னும் ஊரில், தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப் பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான்; அந்தக் கன்னிகையின் பேர் மரியாள். அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப் பட்டவள் என்றான். அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள். தேவ தூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய், அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமான



மிக அழகாக இருந்தாள். ஆனால் அவளிடம் விவரிக்க முடியாத "கடினத்தன்மை" காணப்பட்டது, அவள் அழகாயிருந்தாலும், மிகக் கொடூரம் படைத்தவளாயும், தீயவளாகவும், தந்திரமுள்ளவளாயும், ஏமாற்றுபவளாயும் இருந்து, ஜனங்களின் மேல் அதிகாரம் செலுத்தி, தேசம் முழுவதிலும் அதிகாரம் வகித்தாள். அப்படிப்பட்ட ஸ்திரீ ஒருக்கால் எழும்பலாம், அல்லது வேதத்தில் ஸ்திரீயாக சித்தரிக்கப்படும் அத்தகைய குணம் படைத்த ஒரு ஸ்தாபனம் தோன்றும் என்பதற்கு இது அடையாளமாயிருக்கலாம். அந்த சத்தம், அவள் யாரென்று அறிவிக்கவில்லையென்றாலும், அது எழும்பி வரும் ரோமன் கத்தோலிக்க சபையாக இருக்கக் கூடும் என்று சகோ. பிரன்ஹாம் தன் இருதயத்தில் உணர்ந்தார். அவர் எழுதி வைத்த இந்த தரிசனங்களில் ஆறாம் தரிசனத்தின் கீழ், "ஒருக்கால் இது ரோமன் கத்தோலிக்க சபையாக இருக்கலாம்" என்னும் குறிப்பை அவர் எழுதி வைத்துள்ளார்.

இன்னும் ஒரு முறை காணும்படியாக அந்த சத்தம் சகோ. பிரன்ஹாமிடம் விளம்பினது. அவர் திரும்பிப் பார்த்த போது, ஒரு பெரிய வெடி சத்தம் கேட்டது. அது தேசம் முழுவதையும் சின்னாபின்னமாக்கி, அமெரிக்காவை அழிந்து போன, புகைக் காடான தேசமாக்கியது. அவர் காணும் தூரம் வரைக்கும், எரிமலை குழிகளும், எரிந்து கொண்டிருக்கும் குப்பை மேடுகளுமேயன்றி வேறொன்றும் காணப்படவில்லை. மானிடர் யாருமே கண்ணுக்குத் தென்படவில்லை. பின்பு ஏழாம் தரிசனம் மறைந்து போனது.

## தூதனால் கட்டளை பெற்றார்

சகோ. பிரன்ஹாமின் வினோதமான ஆரம்ப வாழ்க்கைக்குப் பின்பு ஆண்டுகள் கடந்தன. அவர் போதகராகவும் தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு ஊழியக்காரனாகவும் அவரால் கூடுமட்டும் தேவனுக்கு சேவை செய்து வந்தார்.

அவருடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் ஏற்பட விருந்த ஒரு பெரிய மாறுதலின் தொடக்கம் 1946ம் ஆண்டு மே 7ல் நிகழந்தது. அவர் ஒரு நண்பனுடன் வேட்டைக்காக புறப்பட்டுக் கொண்டிருந்த போது இது நிகழ்ந்தது. ஜெபர்ஸன்வில்லின் 8ம் தெருவிலிருந்த அவருடைய வீட்டின் முற்றத்தில் மேப்பில் மரம் (Maple Tree) ஒன்றிருந்தது. அதன் கீழ் அவர் நடந்த போது, ஒரு மகத்தான, பலத்த காற்று அந்த மரத்தின் மேல் வந்ததாக அவர் கூறுகிறார். அது மரத்தின் உச்சியை தாக்கியது. அதனால் மரமே விழுந்து விடுமோ என்று அவருக்குத் தோன்றினது. அந்த பயங்கரமான மோதலின் விளைவாக அவர் தள்ளாடத் தொடங்கினார். அவருக்கு சுகமில்லையென்று நினைத்து அவருடைய மனைவியும் மற்றவர்களும் அவரிடம் ஓடினர். அப்பொழுது அவர் மனைவியிடம், "இருபது ஆண்டுகளுக்கு மேலாக, என் மேல் வரும் இந்த வினோதமான உணர்ச்சியையும் இந்த ஊழியத்தையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்படியே என்னால் போய்க் கொண்டிருக்க முடியாது. இதற்கு எனக்கு பதில் கிடைத்தே

தீரவேண்டும். இது தேவனால் உண்டானதா? இதெல்லாம் என்ன," என்றார். அவர் மனைவியையும் பிள்ளைகளையும் விட்டு பிரிந்து வேதாகமத்தை கையிலெடுத்து செல்லப் போவதாகவும், இதற்கு பதில் கிடைக்காமல் அவர் திரும்பி வரப் போவதில்லையென்றும் மனைவியிடம் கூறினார்.

இவ்வாறு தீர்மானம் செய்து அவருடைய நோக்கத்தை அவர் அறிவித்த பின்பு, சகோ பிரன்ஹாம் இரகசியமான ஓரிடத்திற்கு சென்று தனிமையில் தேடத் தொடங்கினார். இதைக் குறித்து எப்படியும் ஒரு பதில் கிடைக்க வேண்டுமென்றும், அவருடைய இருதயத்தில் சமாதானம் எழவேண்டு மென்றும் அவர் தீர்மானம் கொண்டார்.

தேவன் சில சமயங்களில் சகோ. பிரன்ஹாமை அவருடைய வாலிபப் பிராயத்தில் ஒரு குகைக்கு கொண்டு சென்றிருக்கிறார். இதைக் குறித்து அவர், பின்னால் நிகழ்த்திய பிரசங்கங்களில் குறிப்பிட்டு, அந்த குகையை எந்த மனிதனும் கண்டு பிடிக்க முடியாது என்றும் கூறியிருக்கிறார். இது ஒலி நாடாக்களில் பதிவாகியுள்ளது. அந்த குகை, தன் உபயோகத்திற்கென்றே இயற்கையால் அளிக்கப்பட்டது போல் அமைந்திருந்தது. அதற்குள் மேசையைப் போல் வட்ட வடிவம் கொண்ட வேறொரு பாறையும் இருந்தன. அங்கு ஒரு மனிதன் படுத்து உறங்குவதற்காக இடமும் இருந்தது. அவர் எதையும் அங்கு கொண்டு செல்ல வில்லை. அவை ஏற்கனவே அங்கிருந்தன. அந்த சம்பவம் நிகழ்ந்த அன்றிரவு, இந்த இரகசிய குகைக்குத்தான் அவர் சென்றார்.

அந்த குகையில் சகோ. பிரான்ஹாம் தேவனுடைய சமூகத்தில் முகங்குப்புற விழுந்து கிடந்தார். அவர் உத்தமமாக தம் முழு இருதயத்தோடும் ஜெபம் செய்து தேவனுடைய சமூகத்தைத் தேடின பின்பு, அவர் எழுந்து உட்கார்ந்து பதிலுக்காகக் காத்திருந்தார். எத்தனை முறை சகோ. பிரன்ஹாம், "கர்த்திருக்குக் காத்திருக்கிறவர்கள்" என்று கூறக் கேட்டிருக்கிறோம். அநேக முறை நாம் ஜெபம் செய்யும்போது நாமே பேசிக்கொண்டிருக்கி றோம். நாம் ஜெபம் செய்து முடித்த பின்பு, தேவன் நம்மிடம் பேசும் வரைக்கும் பொறுமையோடே காத்திருப்பதிலேயே இரகசியம் அடங்கியுள்ளது என்று அவர் கூறினார். அதாவது, உங்கள் ஜெபத்தை தேவன் கேட்டார் என்று நீங்கள் விசுவாசித்தால், அப்பொழுது பதிலுக்காகக் காத்திருங்கள்.

ஏறக்குறைய 11ம் மணி நேரத்தில், ஒரு மிருதுவான ஒளி அவருக்கு முன் பிரத்தியட்சமாவதை அவர் கண்டார். அவர் மேலே நோக்கி அந்த ஒளியிடம் செல்ல எழுந்தார். அந்த மகத்தான நட்சத்திரம் அங்கு தொங்கி கொண்டிருந்தது. வழக்கமாக நட்சத்திரத்துக்குள்ள ஐந்து முனைகள் போன்று இதற்கில்லை. காண்பதற்கு அது ஒளிப் பந்து போல் இருந்தது. பின்பு அவர் காலடி ஓசையைக் கேட்டார். அப்பொழுது பெரிய உருவமுள்ள ஒரு மனிதன் அவரை அணுகினார். அவருடைய எடை ஏறக்குறைய 200 பவுண்டு இருக்கும். அவர் கறுப்பு நிறமுடையவராய், தாடி எதுவுமின்றி, தோள் வரைக்கும் தலைமயிர்



கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்.'' (யோவான் 4:14). அவரே ஜீவ அப்பம், ஜீவ ஊற்று, நித்தியமானவர், ஜீவவிருட்சம் ஏதேன் தோட்டத்தின் மத்தியில் இருந்தது போன்று, தேவனுடைய பரதீசின் மத்தியிலும் அவர் இருப்பார்.

ஏதேன் தோட்டத்தின் மத்தியிலிருந்த இவை மரங்கள் என்று சிலர் வாதிப்பதுண்டு, ஆனால் பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள், இவை மரங்களைக் குறிப்பிடுவதில்லை என்று அறிவார்கள். "கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைக்கப்பட்டிருக்கிறது" (லூக்கா 3:9) என்று யோவான் ஸ்நானன் வனாந்திரத்தில் பிரசங்கித்த போது, அவன் இயற்கையில் காணப்படும் மரங்களைக் குறிக்காமல், மக்களையே குறிப்பிட்டான். தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச். சாட்சியாம்" (1யோவான் 5:11) என்று யோவான் கூறுகிறான். "உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை" (யோவான் 5:40) என்று இயேசு யூதர்களிடம் கூறுகிறார். "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன். தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" (1யோவான் 5:12). வேதத்தில் எழுதப்பட்டவைகள் ஒருக்காலும் மாறுவதில்லை. அவைகளோடு நாம் ஒன்றையும் கூட்டவோ, அல்லது குறைக்கவோ கூடாது. குமாரனில் ஜீவன் உண்டு என்பதை வேதம் வெளிப் படையாக அறிவிக்கிறது. அப்படியெனில் ஏதேன் தோட்டத்தில் காணப்பட்ட ஜீவவிருட்சம் இயேசு கிறிஸ்துவாக இருக்க வேண்டும்.

'ஜீவவிருட்சம்' ஒரு ஆளைக் குறிப்பிட்டால், நன்மை தீமை அறியத்தக்க விருட்சமும் ஒரு ஆளைக் குறிப்பிட வேண்டும். அதுதான் சாத்தான். அவ்வாறாயின், நீதிமானாகிய இயேசுவும் பொல்லாங்கானவனாகிய சாத்தானும் ஏதேன் தோட்டத்தின் மத்தியில் அடுத்தடுத்து நின்றனர் "நீ (சாத்தான்) தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்.'' (எசே. 28:13)

'சர்ப்பத்தின் வித்து' பற்றிய சரியான வெளிப் பாட்டை நாம் இங்குதான் பெறுகிறோம். ஏதேன் தோட்டத்தில் உண்மையாக என்ன சம்பவித்தது என்று நாம் சிந்திப்போம். சர்ப்பம் ஏவாளை வஞ்சித்ததாக வேதம் கூறுகிறது. ஏவாள் சர்ப்பத்தினால் கற்பழிக்கப் பட்டாள். "தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது." (ஆதி 3:1) என்று ஆதியாகமத்தில் எழுதப்பட்டிருக்கிற இந்த மிருகத்தின் (சர்ப்பத்தின்) சுபாவம் மனிதனுடைய சுபாவத்திற்கு ஒத்ததாயிருந்தது. மனிதனைப்போல் நன்கு ஆலோசிக்கவும், பேசவும் அதனால் முடிந்தது. மனிதக் குரங்குக்கும் (Chimpanzee) மனிதனுக்கும் இடையேயுள்ள உருவத்தைப் பெற்று, நிமிர்ந்து நடக்கும் மிருகமாக அது இருந்தது. மனிதனுடைய உருவமைப் போடு ஒற்றுமை

வில்லியம் பிரன்ஹாமின் போதகங்கள் அனைத்திலும் ஒருக்கால் மிக அதிகமாக ஆராயப்பட்ட இந்த மூன்றாம் போதகம், ஆதியாகமம் 1 முதல் 4ம் அதிகாரங்களில் மூலப் பாவத்தைக் குறித்து கூறப்பட்டுள்ள உண்மையான சத்தியத்தை அவர் திரும்ப அளித்ததைக் கொண்டதாயுள்ளது.

ஆதி 4:1-2 இவ்வாறு தொடங்குகின்றது: "ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி காயீனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள். பின்பு அவனுடைய் சகோதரனாகிய ஆபேலைப் பெற்றாள் ..."

அவளுடைய முதலாம் குமாரன் பிறந்தபோது, ஏவாள் மிக்க மகிழ்ச்சி கொள்கிறதை நாம் காண்கிறோம். தேவனே சிருஷ்டி கர்த்தர் என்றும், எந்த ஜீவன் தோன்றும் போதும், அது அங்கீகரிக்கப்பட வேண்டுமெனும் உண்மையை அவள் மிகப் பொருத்தமாக அறிந்திருந்தாள். ஆனால் இதற்கு எதிரிடையாக, கர்த்தர் காயீனுடன் நேரடியாக எவ்வித தொடர்பும் கொள்ள மறுக்கிறார். அவன் பிறவி முதற்கொண்டே தள்ளப்பட்டவனாயிருக்கிறான்.

அவனுடைய பெயர் துரோகம், கொலை ஆகியவைகளுடன் சம்பந்தப்பட்டதாக அமைந்துள்ளது. அடுத்த முறை காயீனைக் குறித்து வேதத்தில் குறிப்பிடும்போது இவ்வாறு கூறப்பட்டுள்ளது: "காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை ''(ஆதி 4:5). காயீனின் காணிக்கை மாத்திரம் மறுக்கப் படவில்லை, காயினே அங்கீகரிகப்படவில்லை. அவனுடைய சகோதரனாகியே ஆபேல் அனுபவித்த தேவனிடம் அணுகும் நிலையை அவன் அடையாதபடிக்கு தடைசெய்யப்பட்டான். காயீன் ஏன் புறக்கணிக்கப் பட்டான்? இதனுடன் சம்பந்தப்பட்ட வேறொன்று - ஆதாமும் ஏவாளும் புசித்த பழம் எது? அவர்களுடைய வீழ்ச்சியில் சர்ப்பம் வகித்த பங்கு என்ன? ஆதியாகமம் 3:15ல் கூறப்பட்டுள்ள சர்ப்பத்தின் வித்து எது?

இந்த இரகசியங்களைக் குறித்த விடைகள் அநேக நூற் றாண்டுகளாக மறைக்கப்பட்டிருந்தன. ஆனால் தீர்க்கதரிசியின் ஊழியத்தில் தேவன் இவைகளுக்கு விடையளித்துள்ளார்.

ஏதேன் தோட்டத்தின் மத்தியில் ஜீவவிருட்சமும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சமும் நடப்பட்டிருந்தன. ஜீவவிருட்சத்தினால் மனிதன் வாழ வேண்டுமென்றும், மற்றைய விருட்சத்தில் பங்கு கொள்ளும் நாளில் அவன் சாகவேண்டும் என்னும் கட்டளை அங்கு பிறந்தது. மனிதன் கட்டளையை மீறின போது, மரணம் பாவத்தின் மூலம் பிரவேசித்து, தேவனிடத்திலிருந்து அவனைப் பிரித்தது.

ஏதேன் தோட்டத்தில் காணப்பட்ட ஜீவவிருட்சம் இயேசுவே. யேசு தன்னை நித்திய ஜீவனின் மூலாதாரமாகக் (Source) கருதினார். 'நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம். இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கம் பிழைப்பான்.'' (யோவான் 6:51). "ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னமே நான் இருக்கிறேன்." (யோவான் 8:58). "நான்



வளர்ந்தவராய் காட்சியளித்தார். அவரைக் கண்டவுடனே, சகோ. பிரன்ஹாம் திகிலடைந்தார். ஆனால் அந்த அந்நியர் அவரை பட்சமாய் நோக்கி அவருடன் பேசத்தொடங்கினார். பவுலின் முன்னால் ஒரு தூதன் தோன்றி அவன் செய்ய வேண்டியவைகளை உரைத்தது போல, இந்த தூதனும் சகோ. பிரன்ஹாமுக்கு முன்னால் தோன்றி அவர் செய்யவேண்டிய வைகளை அறிவித்தார். அவர் கூறியவைகளை ஏழு தனித்தனி வகைகளாக இங்கு அளித்துள்ளேன்.

அந்த தூதன், "பயப்படாதே" என்ற கூறி, சகோ. பிரன்ஹாமின் பயத்தை நீக்கினார். அவர் தொடர்ந்து, ''நான் சர்வவல்லமையுள்ள தேவனுடைய சமூகத்தி லிருந்து உன்னிடம் அனுப்பப்பட்ட தூதன்" என்றார். இது முதலாம் கட்டம். அது அவருடைய பயத்தைப் போக்கி அமரிக்கையாயிருக்கச் செய்தது. அந்த தூதன் தான் யாரென்பதையும் அறிவித்தார்.

இரண்டாம் கட்டத்தில், அவர் சகோ. பிரன்ஹாமிடம் அவருடைய வாழ்க்கையைப்பற்றி குறிப்பிட்டு, "உன் வினோதமான வாழ்க்கை, நீ செய்யவேண்டுமென்று தேவன் உன் பிறப்பு முதற்கொண்டு நியமித்துள்ள பணிக்காக உன்னை ஆயத்தப்படுத்த வேண்டுமெனும் நோக்கத்திற்காகவே அளிக்கப்பட்டது என்பதை நீ அறிய விரும்புகிறேன்'' என்றார்.

மூன்றாம் கட்டம்: சகோ. பிரன்ஹாம் சில நிபந்தனைகளைக் கைக்கொண்டு அவைகளை காத்துக் கொள்ளவேண்டுமென்று தூதன் அவரிடம் கூறினார். அவர் தொடர்ந்து, "நீ மாத்திரம் உத்தமமாயிருந்தால், ஜனங்கள் உன்னை நம்பும்படி செய்வாய்." என்று கூறிவிட்டு நான்காம் கட்டத்தில் அதன் விளைவுகளை எடுத்துரைத்தார்.

அவர், "எதுவும் உன் ஜெபத்திற்கு முன்னால் நிற்க முடியாது, புற்றுநோயும் கூட" என்றார்.

தூதனுடைய செய்தியின் ஐந்தாம் கட்டம் ஜனங்கள் இந்த தேவனுடைய மனிதனுக்கு முன்னால் வரும் முன்பு, தங்கள் பாவங்களை தேவனிடம் அறிக்கை யிட்டு வரவேண்டும் என்னும் எச்சரிக்கையாகும். ஜனங் களுடைய சிந்தனைகள் அவர்களுடைய வார்த்தைகளைக் காட்டிலும் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக அதிக சத்தமாக பேசுகிறது என்று அவர் ஜனங்களிடம் கூறவேண்டும். இந்த எச்சரிக்கை பொதுவாக மனிதர் அனைவருக்கும் உரியதாகும்.

பிறகு அந்த தூதன் ஆறாம் கட்டத்துக்குச் சென்று, சகோ. பிரன்ஹாமிடம் அவருடைய வாழ்க்கையையும் ஊழியத்தையும் குறித்து கூறினார். அவர் உலகம் முழுவதும் திரளான ஜனங்களுக்கு பிரசங்கம் பண்ணுவார் என்றும், ஜனங்கள் நிரம்பி வழியும் அரங்கங்களில் அவர் நிற்பார் என்றும், இடமில்லாத காரணத்தால் ஜனங்களை வெளியே அனுப்பிவிட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் தூதன் கூறினார். ஜெபர்ஸன்வில்லிலுள்ள அவருடைய சபை மத்திய

ஸ்தலமாக இருக்கும் என்றும், உலகின் எல்லா பாகங்களிலிருந்தும் ஜனங்கள் தங்கள் விடுதலைக்காக அவருடைய ஜெபத்தை நாடி அந்த இடத்திற்கு வருவார்கள் என்றும் அவர் கூறினார்.

அது மாத்திரமல்ல, அந்த தூதன் தொடர்ந்து, “நீ ராஜாக்களுக்கும், ஆளுகை செய்பவர்களுக்கும், அதிபதிகளுக்கும் ஜெபம் செய்வாய்” என்றார். அது நிறைவேறினதா?" என்று நீங்கள் கேட்கலாம். அது நிறைவேறினதா என்று நாம் பார்ப்போம்.

அடுத்த வாரம் சகோ பிரன்ஹாம் தமது சிறு கூடாரத்துக்குத் திரும்பினார். அந்த உத்தமமான வாலிபன் தன் இருதயத்தில் எவ்வித சந்தேகமுமின்றி, அந்த தூதன் கூறினதை சபையோரிடம் அப்படியே எடுத்துக் கூறி, “ஆயிரக்கணக்கானோர் இந்த இடத் திற்கு வருவார்கள். அவர்கள் உங்களை நெருக்கி, வெளியே நிற்க வைத்து விடுவார்கள். நீங்கள் தேவனுடன் உத்தமமாக இருந்து, நேரத்தோடு வராவிட்டால், நீங்கள் அமருவதற்கு இருக்கைகள் இருக்காது” என்று கூறினதை அக்கூடாரத்தைச் சேர்ந்த முற்காலத்தவர் உங்களிடம் கூறுவார்கள். அப்பட்டணத்திலிருந்தவர்கள் படித்த மக்கள் அவரிடம், "பில்லி பிரன்ஹாம், அப்படி ஒருக்காலும் நடக்காது" என்றனர். ஆனால் அப்படி நிகழ்ந்ததா? சகோ. பிரன்ஹாமின் கடிதக் கட்டுகளில் (Files) காலஞ் சென்ற இங்கிலாந்து அரசன் ஆறாம் ஜார்ஜ் அவர்கள் அவருக்கு எழுதிய கடிதம் ஒன்றுள்ளது. அந்த அரசனின் வேண்டுகோளுக்கு இணங்கி அவர் அங்கு சென்று அவருக்காக ஜெபித்த தனால், அவர் காலிலிருந்த வியாதி நீங்கி சுகம் பெற்றதாகவும், அதற்கு அவர் நன்றி தெரிவிப்பதாகவும் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. மேலும் கூட்டம் ஒன்றில், அநேக ஆண்டுகளாக அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் காங்கிரஸ் உறுப்பினவராயிருந்தவரும், எல்லாராலும் நன்கு அறியப்பட்ட காங்கிரஸ்காரர் ஒருவர், சக்கர நாற்காலியில் பின்னால் அமர்ந்து கொண்டு, விசுவாசத்தைக் குறித்தும் சுகம் பெறுதலைக் குறித்தும் சகோ. பிரன்ஹாம் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார். தீடீரென்று சகோ. பிரன்ஹாம் தமது பிரசங்கத்தை நிறுத்திவிட்டு- அப்போஸ்தலருடைய நடபடிகளில் பவுல் செய்த விதமாக- இந்த மனிதனைப் பார்த்து, "ஐயா, சுகம் பெற உமக்கு விசுவாசம் உள்ளதைக் காண்கிறேன். சக்கர நாற்காலியிலிருந்து எழுந்து நடவுங்கள்" என்றார். அறுபது ஆண்டுகளுக்கு மேலாக சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த அந்த காங்கிரஸ்காரர் உப்ஷா எழுந்து நின்று, துதித்துக் கொண்டே வரிசை வழியாக நடந்து வந்தார். அவர் வாஷிங்டன் டிசிக்கு திரும்பி சென்று, காபிடல் கட்டிடத்தில் (Capitol Building) நின்று கொண்டு, சகோ. பிரன்ஹாம் இருபதாம் நூற்றாண்டின் தேவனுடைய தீர்க்கதரிசி என்று பிரகடனம் செய்தார். அவர் விசுவாசத்துடன், ஒவ்வொரு கிறிஸ்துமஸ் அன்றும் ஒரு ஸ்டெட்ஸன் தொப்பியை (Stetson Hat), அவர் வாழ்நாள் பூராவும் சகோ. பிரன்ஹாமுக்கு அனுப்பித் தந்தார். இதற்கு மாறாக, உலகிலிருந்த வேறு பலர் அவர் ஒன்றுமறியாதவர் என்று அவரைத் தள்ளி வைத்தனர். அவர்கள் செவிசாய்க்கவில்லை, அல்லது அவர்களுக்கு செவி கேட்கவில்லை.



எங்கிருந்து வந்தது என்று மக்கள் அதிசயப்படுகின்றனர். கி.பி. 325ம் ஆண்டில் நடைபெற்ற நிசயாவின் ஆலோசனை சங்கத்தில் இது ஆதாரப் போதனையாக (Foundational Doctrine) ஏற்படுத்தப் பட்டது. தேவத்துவத்தில் காணப்படாத "திரித்துவம்” என்னும் போதனை ரோமாபுரியிலுண்டாயிருந்த அநேக அஞ்ஞான தெய்வங்களை ஆதாரமாகக் கொண்டு உண்டாக்கப் பட்டது, ரோமர்கள் இத்தெய்வங்களிடம் தங்கள் விண்ணப்பங்களை ஏறெடுத்தனர். அதுவுமின்றி, தங்கள் மூதாதையர் மத்தியஸ்த ஸ்தானம் வகிப்பதாக எண்ணி அவர்களிடத்திலும் வேண்டுதல் செய்தனர். பின்பு பழைய அஞ்ஞான தெய்வங்களுக்குப் புதிய நாமங்கள் கொடுக்கப்பட்டு, வேதப்பிரகாரமாக இருக்கவேண்டுமென்று கருதி, அவர்கள் பரிசுத்த வான்களென்ற பெயரில் அழைக்கப்பட்டனர். ஜூபிடர் (Jupiter), வீனஸ் (Venus), மார்ஸ் (Mars) என்னும் தெய்வங்களுக்குப் பதிலாக பவுல், பேதுரு, பாத்திமா, கிறிஸ்டோபர் போன்றவர்கள் தொழப் பட்டனர். ரோமாபுரியின் அஞ்ஞான மார்க்கம் ஒரு கடவுளைக்கொண்டு நடத்தப்பட முடியாததால், அவரை மூன்று கூறுகளாக்கி, மூதாதையரை மத்தியஸ்தர்களாகத் தொழுதது போன்று பரிசுத்தவான்களை மத்தயஸ்தர்களாகத் தொழ ஆரம்பித்தனர்.

அது முதற்கொண்டு ஒரே கடவுளுக்கு மூன்று பதவிகள் அல்லது மூன்று தோற்றங்கள் (Manifestations) உண்டாக்கினர். அதாவது மூன்று ஆட்கள் தெய்வீகத் தன்மையைச் சரிசமமாகப் பகிர்ந்து கொள்கின்றனர் என நம்பினர். ஆனால் இயேசுவை 'இருக்கிறவரும்', 'இருந்தவரும்' 'வருகிறவரும்' என்று வெளிப் படுத்தின விசேஷம் அழைக்கிறது. அவர் 'அல்பாவும் ஓமெகாவும்' என்று கூறும்போது, அவரே எல்லாமென்றும் சர்வவல்லவர் என்றும் அர்த்தம். அவரே சாரோனின் ரோஜா, பள்ளத்தாக்கின் லீலி, காலை விடிவெள்ளி, நீதியின் கிளை, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, அவரே தேவன், சர்வவல்லமையுள்ள தேவன். ஒரே தேவன்.

"அன்றியும் தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக் கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். தூதர்களால் நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார். தேவ தூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்தில் விசுவாசிக்கப் பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப் பட்டார்” என்று வேதம் கூறுகிறது. (1தீமோ 3:16). முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆளைக் குறித்து இவ்வசனம் எதுவும் கூறவில்லை, தேவன் மாம்சத்தில் தோன்றினார் என்று மாத்திரம் கூறுகிறது. ஆம், ஒரே தேவன் மாம்சத்தில் வந்ததன் காரணமாக அவர் வேறொரு தேவனாகிவிடவில்லை. அவர் அதே தேவனாயிருந்தார். தேவன் ஒருவரே என்று அப்போஸ்தலர் காலங்களில் வெளிப்பட்டது; இப்பொழுதும் அது நமக்கு வெளிப்படுகிறது.

உன் வித்துக்கும் அவள் வித்துக்கம் பகை உண்டாக்குவேன் (ஆதி 3:15)

இப்போதனையை ஆதரிக்கும் வேதப் புத்தகம் எதுவுமில்லை. புத்திக் கூர்மையற்ற யோசனையின் விளைவாக இது உண்டானது. எல்லாவகையிலும் ஒத்த மூன்று வித்தயாசப்பட்ட ஆட்கள் என்று கூறும் போது, அது மூன்று கடவுள்களைத் தான் குறிக்கின்றது. அங்ஙனம் இல்லாவிடின் மொழியானது சாதாரணம் விவரிக்கும் அர்த்தத்தை முழுவதுமாக இழந்து விட்டிருக்க வேண்டும்.

"இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும் ஒமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார்" என்னும் வசனத்தை நாம் மறுபடியும் சிந்திப்போம். இது மனிதனையோ அல்லது தீர்க்கதரிசியையோ குறிக்காமல் தேவனைக் குறிக்கிறது. மேலும் இவ்வசனம் மூன்று கடவுள்களை வெளிப்படுத்தாமல் சர்வல்லமையுள்ள ஒரே தேவனை வெளிப்படுத்துகிறது.

சபையின் துவக்க காலத்திலிருந்த மக்கள் மூன்று கடவுள்கள் இருப்பதாக விசுவாசிக்கவில்லை. அப்போஸ்தலர்களிடையே இத்தகைய நம்பிக்கை எதுவும் இருந்ததுமில்லை. அப்போஸ்தலரின் காலங்களுக்குப் பிறகு இத்தத்துவம் ஒரு பிரச்சனையாகி (issue) நிசயாவின் ஆலோசனை சபையில் (Nicene Council) ரோமன் மார்க்கத்தின் கொள்கையாக (Cardinal Doctrine) ஆக்கப்பட்டது. தேவத்துவத்தைக் குறித்த போதகம் நிசாயாவில் பிளவுண்டாக்கி அதன் விளைவாக முற்றிலும் மாறுபட்ட கொள்கைகளைப் பின்பற்றும் இருசாரார் தோன்றினர். ஒரு சாரார் அநேக கடவுள்களுண்டு (Polytheism) என்னும் தத்துவத்தைப் பின்பற்றி, மூன்று கடவுள்களுண்டு என்று சாதித்தனர். மற்றைய வகுப்பினரோ, ஒரே தேவன் உண்டு என்று நம்பினர் (Unitarianism). இது வரை இவ்விருதிறத்தாரும் கிறிஸ்தவர்களிடையே காணப்படுகின்றனர். ஆனால் ஆவியானவரோ யோவானின் மூலம், 'நானே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. நான் எல்லாவற்றிக்கும் எல்லாமுமாய் இருக்கிறேன். என்னைத் தவிர வேறே தேவனில்லை" என்று சபைகளுக்கு வெளிப்படுத்துகிறார்; இந்த வெளிப்படுத்துதலின் மேல் தம்முடைய முத்திரையைப் போட்டிருக்கிறார்.

இயேசுவுக்குப் பிதா யார்? "அவள் (மரியாள்) பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள்" என்று வேதாகமம் கூறுகிறது (மத் 1:18). தேவன் தம்முடைய பிதா என்று இயேசு தாமே கூறினார். அப்படியெனில் நாம் சாதாரண மாக உபயோகிக்கும் பதங்களான தேவனாகிய பிதா, தேவனாகிய பரிசுத்த ஆவி இவையிரண்டும் பிதாவும் பரிசுத்த ஆவியும் ஒருவரே என்று காணப்படுகின்றன. அவ்வாறு இல்லாவிடில், இயேசுகிறிஸ்துவுக்கு இரண்டு தகப்பன்மார் இருக்கவேண்டும். இயேசுவும், "நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்"(இரண்டல்ல) என்று கூறுகிறார். அப்படியெனில் தேவன் ஒருவரே.

மேற்கூறியது சரித்திரப் பிரகாரமாகவும், வேதப் பிரகாரமாகவும் உண்மையாக இருப்பதால் இந்த மூன்று கடவுள்களின் தத்துவம்



காங்கிரஸ்காரர் உப்ஷா சுகம் பெற்றதை ரீடர்ஸ் டைஜஸ்ட்' (Readers' Digest) என்னும் பத்திரிக்கை வெளியிட்டது. சகோ. பிரன்ஹாமின் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் நிகழ்ந்த இத்தகைய அற்புதங்களைக் குறித்து உலகிலேயே மிக அதிகமாக விற்பனையாகும் 'ரீடர்ஸ் டைஜஸ்ட்'ல் இரண்டு அருமையான கட்டுரைகள் வெளியானது நமது கவனத்தைக் கவரும் ஒன்றாக அமைந்துள்ளதல்லவா? வேதாகமத்துக்கு அடுத்தபடியாக 'ரீடர்ஸ் டைஜஸ்ட்'ல் வெளியானதையே ஜனங்கள் எடுத்துக் கூறுகின்றனர். வேதாகமத்தைக் குறித்து பேசுவது போன்றே ஜனங்கள், "நான் அதை ரீடர்ஸ் டைஜஸ்ட்'ல் படித்தேன்" என்று கூறுகின்றனர். எனவே தேவன், தாம் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பியுள்ளார் என்பதை உலகம் அறியவேண்டும் என்னும் நோக்கத்திற்காக இதை வாய்க்கச் செய்தாரேயன்றி வேறல்ல. அவர்கள் மாத்திரம் செவி கொடுத்திருந்தால்!

தூதனுடைய செய்தியின் ஏழாம் கட்டம், சகோ. பிரன்ஹாமின் ஊழியத்தில் நிகழவிருந்த வெவ்வேறு கட்டங்களைக் குறித்ததாகும். ஜனங்கள் அதை முதலாம் அடையாளம், இரண்டாம் அடையாளம் என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் சகோ. பிரன்ஹாமோ அவைகளை 'மூன்று இழுப்புகள்' (three pulls) என்று குறிப்பிட்டார். அவர் அபிஷேகத்தில் இருக்கும் போது, ஒருவரின் கையைப் பிடித்தால், அந்த நபரிலுள்ள ஆவி அவருடைய ஆவியுடன் தொடர்பு கொள்ளும்போது, அது குழப்பத்தையும் எதிர் தாக்குதலையும் உண்டாக்குமென்றும், அதன் விளைவாக அந்த நபரின் கையில் ஏற்படக்கூடிய துடிப்பை அவருடைய கையில் உணர்ந்து, அவருக்கு என்ன வியாதியென்று அறிந்து கொள்ள முடியுமென்றும் தூதன் அவரிடம் கூறினார். அந்த வியாதி என்னவென்று ஜனங்களுக்கு எடுத்துரைப் பதன் மூலம் கூட்டத்திலுள்ளவர்களின் விசுவாசம் ஊக்குவிக்கப்பட்டு, அவர்களும் விசுவாசிப்பார்கள்.

## மூன்று இழுப்புகள்

நான் முதன் முதலாக சகோ. பிரன்ஹாமை சந்தித்தபோது, அவருடைய ஊழியத்தில் 'இழுப்பு' வெளிப்படும் கட்டத்தை அவர் அடைந்திருந்தார். ஜனங்கள் அவருக்கு முன்னால் வந்தபோது. அவர் கண்களால் காணமுடிந்த வியாதிகளைத் தவிர- குருடு, ஊனம், திமிர்வாதம் போன்றவைகளைத் தவிர- மற்றவைகள்; அவர் அவர்களுடைய கையைப் பிடித்து, அவர்களுடைய வாழ்க்கையில் பாவம் எதாகிலும் இருந்தால், அது என்னவென்று முதலில் அறிவித்தார்.

இரண்டாம் அடையாளம் அல்லது 'இழுப்பு என்னவெனில். இருதயத்திலுள்ள இரகசியங்களை அறிவதே. அவர் ஜனங்களுடன் உரையாடி, அவர்களுடைய பெயர்களையும், அவர்களைக் குறித்த மற்ற உண்மைகளையும் பகுத்தறிந்து கொள்வார் (தேவனுடைய வார்த்தையானது இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், இருதயத்தின் நினைவுகளையும்

யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது என்பதை ஞாபகம் கொள்ளுங்கள்-எபி 4:12) சகோ. பிரன்ஹாமின் ஊழியத்தில் இது 1950-1959ன் பின் பாகத்திலும், 1960ன் ஆரம்ப காலத்திலும் வெளிப்பட்டதை ஜனங்கள் கண்டனர். ஆனால் மூன்றாம் இழுப்பு ஒன்றிருந்தது. இதுவே அவருடைய ஊழியத்தின் கடைசி கட்டம். "இது மணவாட்டியை எடுத்துக் கொள்ளப்படுதலில் கொண்டு செல்லும்" என்று அவர் கூறினார்.

## மூன்றாம் இழுப்பு

சகோ. பிரன்ஹாமின் பிரசங்கங்களில் ஒன்றான "கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள்" என்னும் செய்தியில், அவருடைய ஊழியத்தின் பின் கட்டத்தின் முக்கியத்துவத்தை விவரிக்க முயல்கிறார். அச்செய்தியின் முடிவில் அவர் உரைத்த ஒரு பாகம் பின்வருமாறு:

'கவனியுங்கள், இந்த செய்தியை அறிவிக்கத் தொடங்கும் அந்த நாளில். பாருங்கள்? முதலாம் இழுப்பு-சுகமளித்தல்; இரண்டாம் இழுப்பு-தீர்க்கதரிசனம் உரைத்தல்; மூன்றாம் இழுப்பு-வார்த்தை திறக்கப்பட்டு இரகசியங்கள் வெளிப்படுதல். வார்த்தையை வெளிப்படுத்த தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் மேலான வகுப்பினர் எவருமில்லை, தீர்க்கதரிசி உறுதிப் படுத்தப்படக்கூடிய ஒரே வழி வார்த்தையின் மூலமே. வார்த்தையில் முத்திரிக்கப் பட்டு மறைவாக இருந்த இரகசியங்களை வெளிப்படுத்த ஏழு முத்திரைகள் திறக்கப் பட்டதே மூன்றம் மூன்றாம் இழுப்பாகும் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள்."

சகோ. பிரன்ஹாமின் மூன்றாம் இழுப்பு, அவருடைய ஊழியத்தில் காணப்பட்ட போதகப் பகுதியாகும். முதலிரண்டு இழுப்புகளும், இயற்கைக்கு மேம்பட்டது செயல் புரிந்த காரணமாக, அவருடைய தீர்க்கதரிசி ஊழியத்திற்கு ஜனங்களின் சிந்தையைக் கவர்ந்தது. ஆனால் இந்த சந்ததிக்கோ அற்புதங்களைக் காட்டிலும் அதிகமான ஒன்று தேவையாயிருந்தது. வார்த்தைக்கு ஜனங்களைத் திருப்பும் ஒரு செய்தியுடன் இந்த எலியாவை அனுப்புவது தேவனுடைய நோக்கமாயிருந்தது.

## தேவன் தமக்குச் சொந்தமானவரை உறுதிப்படுத்துகிறார்

ஆயினும், உலகமானது அவர் இயற்கைக்கு மேம்பட்ட சூழ்நிலையில் புரிந்த செயல்களுக்காகவே அவரை முக்கியமாக ஞாபகம் வைத்துள்ளது. நமது நாட்களில், அவர் புரிந்த செயல்களுக்கு இணை வேறு எதுவுமேயில்லை. யோவான் சுவிசேஷம் இந்த சிறப்பான வசனத்துடன் முடிவடைகிறது.

''இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்.' (யோவான் 21:25).



சத்தியம் திரும்ப அளிக்கப்பட வேண்டும் (தேவத்துவத்தைக்குறித்து மேலும் அறிந்து கொள்ள சேர்ப்புரை II ஐக் காண்க.)

சகோ. பிரன்ஹாம், தாம் தொடர்ச்சியாக ஏழு சபைகாலங் களைக் குறித்து அளித்த செய்திகளிலிருந்து, சில உறைப்பான (Poignant) குறிப்புகளை கீழே அளித்துள்ளேன்:

## வாழ்த்துதல்

'இருக்கிறவர்,' 'இருந்தவர்,' 'வருகிறவர்,'. உண்மையுள்ள சாட்சி, 'மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர்', 'பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி', 'அல்பாவும் ஓமேகாவும், சர்வ வல்லவர்,' என்னும் பட்டப் பெயர்கள், தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவின ஒருவரான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விவரிக்கின்றன.

யோவானுக்குள்ளிருந்த தேவ ஆவியானவர் ஒருவரே என்றும் அவரே எல்லாவற்றிற்கும் மேலான கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்றும் வெளிப்படுத்த மேற் கூறிய பட்டப் பெயர்களைக் கொடுக்கிறார். ஒரு தேவனுக்குப் பதிலாக மூன்று தேவர்கள் உண்டு என்று அநேகர் இக்காலத்தில்தப்பான அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர். இயேசு யோவானுக்களித்த வெளிப்படுத்துதல் இத்தவறைச் சரிப்படுத்துகிறது. மூன்று கடவுள்கள் இல்லை; ஆனால் ஒரே கடவுள் மூன்று பதவிகளைக் (Office) கொண்டவராயிருக்கிறார். ஒரே தேவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூன்று பட்டங்களைக் கொண்டிருக்கிறார். ஆதித் திருச்சபைக்கு இந்த மகத்தான வெளிப்பாடு உண்டாயிருந்தது. இந்தக் கடைசிக் காலத்தில் அது நமக்கு மீண்டும் கொடுக்கப்பட்டு, சரியான தண்ணீர் ஞானஸ்நானத்தின் உண்மையும் வெளிப்படுத்தப்படுகிறது.

நவீன வேத சாஸ்திரிகள் நான் கூறுவதை ஆமோதிக்க மாட்டனர். ஏனெனில் ஒரு கிறிஸ்துவப் பத்திரிகையிலே பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"திரித்துவத்தைக் குறித்த போதகம் பழைய ஏற்பாட்டின் சாராம்சமும் புதிய ஏற்பாட்டின் சாராம் சமூமாகத் திகழ்கின்றது. ஒரு தேவனைவிட அதிகமான தெய்வங்கள் உண்டு என்னும் தத்துவத்தை இவ்விரு ஏற்பாடுகளும் ஆதரிக்கவில்லை. இருப்பினும் பிதா கடவுளென்றும், குமாரன் கடவுளென்றும், பரிசுத்த ஆவி கடவுளென்றும் இம்மூன்றும் ஒரே ஆளின் அம்சங்களல்லவென்றும், மூன்று பேர்கள் ஒருவருக்கொருவர் சம்பந்தப்பட்டவர்களாயிருக்கின்றனரென்றும் புதிய ஏற்பாடு தெளிவாக விளக்குகிறது. ஒரே தேவனும் மூன்று பேர்களுமாகிய மகத்தான போதனை நமக்குண்டு, மேலும், "வேதத்தில் கூறப்பட்டவண்ணம் தேவன் மூன்று ஆட்களைக் கொண்டவராயிருக்கிறாரேயன்றி அவர் ஒரே ஆளல்ல. இதுதான் திரித்துவத்தின் பெரிய ரகசியம்" என்று கூறப்படுகிறது.

திரித்துவக்காரர் கூறுவது போன்று இது ஒரு பெரிய ரகசியம்தான். மூன்று பேர் எவ்வாறு ஒரே கடவுளில் இருக்கமுடியும்?

குமாரன், பரிசுத்த ஆவியை தெய்வங்களாக்கிக் கொண்டபடியாலும், இத்தகைய நம்பிக்கை தோன்றினது. நான்காம் நூற்றாண்டில் நடந்த நிசாயா ஆலோசனை சங்கக் கூட்டத்தின் போது, இதற்கு திரித்துவ அர்த்தம் அளிக்கப்பட்டது.

தவறான "ஞானஸ்நான சூத்திரம்" எங்கும் பரவினது போல் இந்த "புதிய" கருத்தும் கிறிஸ்தவ சபைகளில் பரவி, அநேக நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்களின் சிந்தையில் ஆழமாகப் பதிந்துள்ளதால், அதன் உண்மைத்துவத்தைக் குறித்து கேள்வி கேட்டாலே, அது மதத்துரோகமாகக் கருதப்படுகிறது.

ஒரே தேவனான யேகோவா தம்மை பழைய ஏற்பாட்டில் பிதாவாகவும், சுவிசேஷங்களில் குமாரனாகவும், அப்போஸ்தலருடைய நடபடிகளில் பரிசுத்த ஆவியாகவும் வெளிப்படுத் தினார் என்னும் வெளிப்பாட்டை சபை இழந்தது. உண்மையாக அது ஒரே தேவனின் மூன்று யுகங்கள் (dispensation) - நமக்கு மேலே உள்ள தேவன் (God above us); நம்மோடுள்ள தேவன் (God with us); நமக்குள் இருக்கும் தேவன் (God in us). மூன்று ஆட்கள் அல்ல, ஆனால் மகிமையான ஒருவர் முடிவில் அற்புதவிதமாக திரை நீக்கப்பட்டு வெளிப்படுகின்றார் (எபி.1:3).

குமாரன் பூமியில் தோன்றினபோது, பிதா பரலோகத்தில் தங்கியிருந்தார் என்பதை நுண்ணறிவு சிந்தைகொண்ட அஞ்ஞான வேதபண்டிதர்களால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. தேவன் ஒரே நேரத்தில் பரலோகத்திலும் பூமியிலும் இருக்க முடியும் (யோவான் 14:10) என்பதை அவர்கள் மறந்து, தேவத்துவத்தில் இரண்டு பேராவது இருக்க வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தனர். அப்போஸ்தலர் 2ல் பரிசுத்த ஆவி பிரவேசித்து அதை மூன்று ஆட்களாகச் செய்தது. அவர்கள் குமாரனை தேவத்துவத்தில் இரண்டாம் ஆளாக ஆக்கினர். இயேசு தேவத்துவத்தில் இருப்பதாக வேதம் கூறவில்லையென்றும், தேவத்துவம் இயேசுவில் உள்ளது என்று தான் அது கூறுகின்றது என்பதை அவர்கள் உணரத் தவறினர். "ஏனென்றால், தேவத்து வத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது." (கொலோ. 2:9). பிதா தேவனென்றும், குமாரன் தேவனென்றும் மாத்திரமே அவர்களால் காண முடிந்ததேயன்றி பிதா தேவனென்றும், குமாரன் தேவன் வாசம் செய்த சரீரம் அல்லது மனிதன் என்னும் உண்மையான கருத்தை அவர்கள் காணத் தவறினர். (லூக்கா 1:38; 1 தீமோ 3:16).

இதன் விளைவாக, தேவத்துவத்தில் மூன்று ஆட்கள் உள்ளனர் என்று தீர்மானிக்கப்பட்ட இக்கருத்து, எல்லா வகையிலும் விக்கிரகாராதனையாகி, இஸ்ரவேல் ஜனங்கள் தொடர்ச்சியாக அஞ்ஞான தெய்வங்களை வழிப்பட்டதற்கு ஒப்பாக அமைந்து விட்டது.

இக்கருத்து உள்ளே நுழைந்து விட்டதை தேவன் இத்தனை காலங்களாக காணாதவர் போலிருந்தார். ஆனால் கடைசி தூதனின் ஊழியத்தில், தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு இதன் உண்மையான



இந்நாட்களில் இயேசுகிறிஸ்து தமது தீர்க்கதரிசியில் நிறைவேற்றின ஊழியமும் அவ்வாறே அமைந்திருந்தது என்ற கூறுவது மூடத்தனமல்ல. அதில் நிகழ்ந்த அற்புதங்களையும், இயற்கைக்கு மேம்பட்ட தோற்றங்களையும் அதன் விளைவுகளையும் விவரிப்பதென்பது கூடாத காரியம். அது ஆபிரகாம் நட்சத்திரங்களை எண்ணுவதற்கு ஒப்பாயிருக்கும். அவருடைய ஊழியத்தின் இறுதி ஆண்டு வரையிலும் (அதாவது 1965 வரையிலும்) தேவனுடைய தாழ்மையுள்ள தீர்க்கதரிசியாகிய இவர், இருதயத்தின் சிந்தனைகளை பகுத்தறிவதற்கும், எல்லா விதமான வியாதிகளை சுகப்படுத்துவதற்கும், வெவ்வேறு அற்புதங்களைச் செய்வதற்கும் உபயோகிக்கப் பட்டார். தேவனுடைய கிருபையின் அதிகாரப்பூர்வமான அத்தாட்சியை உலகம் - இரண்டயிராம் ஆண்டுகளுக்கு முன்பல்ல- இன்று பெற்றுள்ளது. சகோ. பிரன்ஹாமின் கூட்டங்களில் கலந்துகொண்டு அவைகளில் பகுத்தறிவின் வரம் கிரியை செய்ததையும், அற்புதங்கள் நிகழ்ந்ததையும் கண்கூடாகக் கண்ட ஆயிரக்கணக்கானவர் இன்னமும் உயிரோடுள்ளனர்.

## ஒரு தீர்க்கதரிசி தென் ஆப்பிரிக்காவுக்கு விஜயம் செய்கிறார்

அவருடைய மிகப்பெரிய, தனிப்பட்ட எழுப்புதல் கூட்டம் தென் ஆப்பிரிக்காவில் நடந்தது எனலாம். அங்கு அவர் நிகழ்த்திய ஊழியம் முழுவதுமே அநேக அற்புதங்களைக் கொண்டதாக இருந்ததால் அவருடன் பயணம் செய்த ஜூலியஸ் ஸ்டாட்ஸ்கிலெவ் (Julius Stadsklev) என்பவர் அந்த பயணத்தைக் குறித்தே ஒரு புத்தகம் எழுதியுள்ளார். 'ஒரு தீர்க்கதரிசி தென் ஆப்பிரிக்காவுக்கு விஜயம் செய்கிறார்" என்னும் அப்புத்தகத்தில், டர்பன் வட்டங்களில் நிகழ்ந்தவைகளை தெளிவாக எடுத்துக் கூறுகிறார். அவருடைய புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட சில குறிப்புகள் பின்வருமாறு:

### ஞாயிறு, நவம்பர் 25, 1951

மாலை கூட்டம் தொடங்குவதற்கு முன்பே, காலை கூட்டத்தில் சுகம் பெற்றவர்களைக் குறித்த அறிவிப்புகள் வந்த வண்ணமிருந்தன. அந்நாளில் டர்பனில் எத்தனையோ பேர் சுகம் பெற்றனர். அவை அனைத்தையும் இங்கு குறிப்பிடுவது என்பது கூடாத காரியம். சுகமளித்தலைக் குறித்த தரிசனங்களை சகோ. பிரன்ஹாம் கண்டபோது, அவர் ஜனங்களை சுட்டிக் காட்டி, அவர்கள் சுகமடைந்ததாக அறிவித்தார். சக்கர நாற்காலிகளிலிருந்து பலர் எழுந்து நடந்தனர். அவர்களில் சிலர் முதன்முறையாக அப்படிச் செய்தனர். செவிடரும் ஊமையரும், அவர்களுக்கு தங்கள் வாழ்க்கையில் முதன் முறையாக காது கேட்கத் தொடங்கின போது, புன்னகை புரிந்து வாய் வழியாக சத்தமிட்டனர். இதெல்லாம் என்ன வென்று புரியாத அநேக பிள்ளைகள் அங்கிருந்தனர். ஆனால் நடக்க

முடியாத அவர்களும், இதுவரை அவர்கள் புரியாத ஒரு செயலைப்புரிந்தனர்- அதாவது நடக்கத் தொடங்கினர்.

உண்மையாகவே டர்பன் பட்டணத்தில், அது ஆவிக்குரிய விழிப்பின் மகத்தான நாளாயிருந்தது. காவல் படையினரின் அறிவிப்பின்படி, 55,000 முதல் 60,000 பேர் சுவிஷேத்தைக் கேட்க அங்கு குழுமியிருந்தனர். அது மட்டுமின்றி, தென் ஆப்பிரிக்காவிலேயே மிகப் பெரியதும் அழகானதுமான அந்த குதிரைப் பந்தய மைதானத்தில் இடம் கிடைக்காமல் திரும்பி அனுப்பப் பட்டவர்கள் 15,000 பேர். தேவன் ஆயிரக்கணக்கானவரின் இருதயங்களில் பேசி, சுவிசேஷத்தைக் கேட்க அவர்களை அங்கு வரச்செய்து, ஆத்துமாவிலும் சரீரத்திலும் அவர்கள் சுகம்பெறச் செய்தார்.

ஜான் எஃப் உட்டர்சன் (John F. Wooderson) என்னும் உள்நாட்டு போதகரின் குறிப்புகள், திரு. ஸ்டாட்ஸ்கிலெவ் தன் புத்தகத்தில் எழுதி வைத்துள்ள மூன்று பேர்களின் குறிப்புகளில் ஒன்றாகும். அவருடைய குறிப்பின் ஒரு பாகம் பின்வருமாறு:

இந்நாட்களில் தேவன் மனிதருக்கு அளித்துள்ள அற்புதங்களை செய்யும் ஊழியம், அநேக தேசங்களில் ஆவிக்குரிய விழிப்புணர்ச்சியை அளிக்க ஜீவசக்தியாயும் வல்லமையுள்ளதாகவும் அமைந்திருக்கிறது அல்லவா? வெறுப்பு, அவநம்பிக்கை, தேவன் பேரில் நம்பிக்கையில்லாமை ஆகிய அனைத்தும் கொண்டுள்ள இக்காலத்திற்கு இது தேவனுடைய பதிலாக அமைந்துள்ளது அல்லவா? தேவனால் கனப்படுத்தப்பட்ட சகோ. பிரன்ஹாமின் ஊழியத்தில், பிரமிக்கத்தக்க அநேக சம்பவங்கள் நிகழ்ந்ததை ஜனங்கள் கண்டனர். புதிய ஏற்பாட்டின் நாட்களை நினைவுகூராமல் ஒருவரால் இருக்க முடியாது. எல்லாவிடங்களிலிருந்தும் பிணியாளிகள் - சகலவிதமான வியாதிகளையும் உடையவர்கள்- அங்கு வந்திருந்தனர் ... சிலர் கக்கதண்டங்களை (Crutches) ஊன்றியும், சிலர் சக்கர நாற்காலிகளிலும், வேறு சிலர் டோலிகளிலும் (Stretchers) அங்கு வந்திருந்தனர். தேவனுடைய தாசன் பெற்றிருந்த அந்த அசாதாரண வரம் கிரியை செய்து, ஆண்களின் வியாதிகளையும் எடுத்துரைத்தது. அதனுடன் அவருடைய ஆழ்ந்த தாழ்மையையும், அவதியுறும் மானிடருக்காக அவருக்கிருந்த அனுதாபத்தையும் இணைத்து நோக்கும் போது, மெய்யாகவே அவர் “தேவனால் அனுப்பப்பட்ட மனிதன்” என்பது உறுதியான நிரூபணமாகின்றது. "இந்த எளிய ஜனங்களின் மேல் இரக்கம் கொண்ட அவர்களை சுகமாக்கும்" என்று அவர் தேவனிடம்கெஞ்சி, தமது ஆத்துமாவின் ஆழத்திலிருந்து ஏறெடுத்த ஜெபங்களை நம்மால் மறக்கவே முடியாது. அவர் ஜெபம் பண்ணின போது, பதில் வந்தது. அந்த திரளான வட்டத்தின் மத்தியில், ஆண்களும் பெண்களும் தங்கள் சரீரத்தில் சாத்தானின் வல்லமையிலிருந்து விடுதலையாயினர். கோணலாயிருந்த அவயவங்கள் நேராயின, குருடர் பார்வையடைந்தனர். செவிடர் கேட்டனர்; புற்றுநோய், சதை வளர்ச்சிகள், இருதயக் கோளாறுகள்



தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான். அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். அல்லாமலும் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்த போது, பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சென்னார்கள்." (அப். 19:16)

எபேசுவில் வாழ்ந்த இந்த நல்ல மனிதர்கள், மேசி யாவின் வருகையைக் குறித்து யோவான் பிரசங்கித் ததைக் கேட்டு பாவத்தினின்று மனந்திரும்புதலுக் கேற்ற ஞானஸ்நானத்தைப் பெற்று, இயேசுவை விசுவாசிப்பதற்கென அவருடைய வருகையை எதிர் நோக்கியிருந்தனர். ஆனால் அவர் வந்தபோது, அவரைக் காணத்த வறிவிட்டனர். இப்பொழுது அவர்கள் இயேசுவைப் பின் நோக்கி, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியைப் பெறும் சமயம் வந்து விட்டது. அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று பவுல் அவர்கள் மேல் கை வைத்தவுடனே பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார்.

நீங்களும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுவீர்களானால், பரிசுத்த ஆவியால் தேவன் உங்களை நிரப்புவார் என்று வேத வசனம் கூறுகிறது. எபேசியர் பரிசுத்த ஆவியைப் பெற்றதன் மூலம், "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்' (அப் 2:38) என்னும் வேதவாக்கியம் நிறைவேறிற்று. பவுலும், பேதுருவும் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் ஒரே ஞானஸ்நானத்தைக் குறித்துப் பேசுகின்றனர். இதைக் கடைசி வரை மாற்ற முடியாது. பெந்தெகொஸ்தே நாள் தொடங்கி, தெரிந்து கொள்ளப்பட்ட கடைசி நபர் ஞானஸ்நானம் பெறும் காலம் வரைக்கும் அது அவ்வாறே இருக்கம். “நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப் பட்டவனாயிருக்கக் கடவன்” (கலா 1:8).

நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் (மாற் 12:29)

தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறித்த சத்தியத்தை அறிந்து கொள்ளுதலுடன் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளது தேவத்துவத்தைக் குறித்த சத்தியமாகும். சபைகள், தங்கள் பாரம்பரியங்களின் காரணமாக, ஒரே தேவனில் மூன்று வெவ்வேறு அல்லது தனிப்பட்ட ஆட்கள் உள்ளதாக நம்பியுள்ளன. வேதத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று கூறப்பட்டுள்ளதாலும், அவர்கள் பிதா,

என்றும், அந்த நாமம் எல்லா பட்டங்களையும் தேவனுடைய தோற்றங்களையும் தனக்குள் கொண்டிருக்கும் என்றும் ஏசாயா தீர்க்கதரிசி முன்னுரைத்த அந்த கம்பீரமான சத்தியத்தை அவர்கள் மறந்து விடுகின்றனர்: "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு எனப்படும்," (ஏசா 9:6). இந்த கட்டளையைப் பெற்ற சீஷர்களுக்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் நாமமே என்னும் வெளிப்பாடு இருந்தது. எனவே வேதத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஞானஸ்நானமும் அந்த நாமத்தினாலேயே கொடுக்கப்பட்டது (அப் 2:38; அப் 8:16; அப் 10:48; அப் 19:5)

வில்லியம் பிரான்ஹாம் இந்த சத்தியத்தை தமது அநேக பிரசங்கங்களில் வலியுறுத்தியுள்ளார். அவை ஒன்றில் அவர் பின்வருமாறு கூறுகின்றார்:

பரிசுத்த வேத வாக்கியங்களின் அர்த்தம் மாற்றப்படும் இந்நாட்களில் வாழும் நமக்குத் தேவத்துவத்தைக் குறித்த சத்தியம் பரிசுத்த ஆவியானவரின் மூலமே வெளிப்படும். ஜெயங்கொள்ளும் சபை வெளிப்படுத்தலின் மேல் கட்டப்பட்டிருப்பதால், எல்லா சத்தியத்தையும் தேவன் நமக்கு வெளிப்படுத்துவார் என்று நாம் எதிர்பார்க்கலாம், ஆனால் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறித்த வெளிப்படுத்துதல் நமக்கு அவசியமேயில்லை. ஏனெனில் தேவனுடைய நேர்முகமான கட்டளையாகிய 'பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து' என்று அவர்கள் அறிந்திருந்த படியால், அந்நாமத்தில் அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். வேறு எம்முறையிலும் அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்ததாக வேதத்தில் சான்று இல்லை. 'அப்போஸ்தலருடைய நடபடிகள்' உண்மையான சபையின் செயல்களைக் கொண்ட ஒரு புத்தகம் என்று பகுத்தறிவு நமக்குப் போதிக்கும். அப்படியிருக்க, அப்போஸ்தலர்கள் அவ்வித ஞானஸ்நானம் கொடுத்திருப் பார்களாயின் நாமும் அதே ஞானஸ்நானம் அப்போஸ்தலர் காலத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். அவ்விதம் பெறாத எவனும் அந்நாமத்தில் மறுபடியும் ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருந்தது. ''அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு: நீங்கள் விசுவாசிகளான போது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். அவன் அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்; யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள். என்றார்கள். அப்பொழுது பவுல்: யோவான்



ஆகிய அனைத்துமே இயேசுவின் நாமத்தினால் சுகமாக்கப்பட்டன. சகோ. பிரன்ஹாம் மிகுந்த விசுவாசத்துடன் அந்த திரளான கூட்டத்தினரை, சுகமளிக்கும் அந்த ஒருவரிடமே சுட்டிக் காட்டினார். சுகமளிக்க அவருக்க வல்லமையுண்டு என்னும் கருத்தை மறுக்க அவர் ஒரு போதும் தவறியதில்லை.

சகோ. பிரன்ஹாமின் ஊழியத்தைக் குறித்து எஃப், எஃப் பாஸ்வர்த் (F.F Bosworth) என்பவர் உரைத்துள்ள அபிப்பிராயங்களுடன் இப்பாகத்தை முடிக்க விரும்புகிறேன்.

சகோ. பிரன்ஹாம் சுகமாக்கும் வரத்திற்கு மாத்திரம் வாய்க்காலாக இராமல், அதைக் காட்டிலும் மேலான ஒன்றிற்கும் அவ்வாறு இருந்தார். அவர் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளைப் போல் ஞானதிருஷ்டிக்காரராக (Seer) விளங்கினார். சம்பவங்கள் நிகழ்வதற்கு முன்னமே, அவர் அவைகளை தரிசனத்தில் கண்டார். “நீர் எப்படி இவைகளைக் காண்கிறீர்?” என்று நான் கேட்ட தற்கு, அவர், ''உம்மை எப்படி காண்கிறேனோ அதேவிதமாக. ஒரே ஒரு வித்தியாசம் என்னவெனில், அது தரிசனம் என்று அறிகிறேன்” என்று விடையளித்தார். தன்னைச் சுற்றிலுமுள்ள பொருட்களை ஒருவர் எவ்வளவு தெளிவாகக் காண்கிறாரோ, அது போன்று, பகல் நேரத்தில் சகோ. பிரன்ஹாம் ஜெபத்தில் தரித்திருக்கும் போது, அன்றிரவு நடக்கவிருக்கும் சில அற்புதங்களை, அவை நிகழும் முன்பே, முன் கூட்டியே தரிசனத்தில் காண்கிறார். சிலர் பிணியாளிகளின் ஊர்தியிலுள்ள (ambulance) கட்டில்களில் சுமந்து செல்லப்படுவதையும், அல்லது சக்கர நாற்காலிகளில் அமர்ந்திருப்பதையும் கண்டு, அவர்கள் காண்பதற்கு எவ்வாறிருப்பார்கள் என்றும், எந்த விதமான ஆடைகள் அணிந்திருப்பார்கள் போன்றவைகளை விவரிப்பார். இந்த அற்புதங்கள் அவருக்க முன் கூட்டியே காண்பிக்கப் படுவதால் அந்நேரத்தில் அவரைச் சுற்றி நடப்பவைகளைக் குறித்து அவர் ஒன்றும் அறியதவராய் இருக்கிறார், இந்த வரத்தை அவர் பெற்று மூன்று ஆண்டுகளுக்கு மேலான போதிலும், அவர் ஏற்கனவே கண்ட தரிசனங்கள், அவைகளை அவர் கண்ட விதமாகவே, ஒரு முறை யாவதும் நிறைவேறாமல் போனதில்லை. இச்சமயங்களில் அவர் மிகுந்த உறுதியுடன், “கர்த்தர் உரைக்கிற தாவது” என்று கூற முடிகிறது; அவர் ஒரு போதும் தவறாயிருந்ததில்லை. தரிசனத்தில் அவர் என்ன செய்வதாகக் காண்கிறாரோ அதை அப்படியே செய்வதாக அவர் சென்ற வாரம் என்னிடம் கூறினார். அவருடைய ஊழியத்தின் கட்டத்தின் வெற்றி 100 சதவீதமாகும்.

அந்த வரம் கிரியை செய்து கொண்டிருக்கும்போது, சகோ. பிரன்ஹாம் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்துக்கும் கிரியைகளுக்கும், எந்த மனிதனுடைய ஆவிக்குரிய நிலைக்கும், நான் கண்டவர் அனைவரிலும் மிக அதிக உணர்ச்சியுள்ளவராயிருக்கிறார் (Sensitive). அவருடைய ஆவிக்குரிய வரங்களை கிரியை செய்ய வைக்கும் அபிஷேகத்தின் கீழிருக்கும் போதும், தூதனுடைய பிரசன்னத்தை அவர்

உணர்ந்திருக்கும் போதும் அவர் மாமிசத் திரையைக் கிழித்து ஆவிக்குரிய உலகை அடைந்து, அங்கு காணக் கூடாதவைகளை காணும் நிலையை அவர் அடைவதாகத் தோன்றுகிறது.

# மூன்றாம் அத்தியாயம்
# நான் திரும்ப அளிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்
## வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்

இயேசுகிறிஸ்து, தாம் பேசுவதைக் கேட்க வந்த யூதர்களிடம், அவர்கள் பயபக்தியாய் பின்பற்றும் மதம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படாது என்று அறிவித்ததனால், அவர்கள் கோபத்துக்கு ஆளானார். இத்தகைய திகைப்புண்டாக்கும் கண்டனத்தை அவர் செய்யக் காரணம், அவர்கள் "மனுஷர்களுடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்தனர்'' என்பதால் (மாற்.7:7) அவர்களிடம் அவர் வெளிப்படையாகக் கூறினது என்னவெனில், அவர்கள் பல ஆண்டுகளாக, தேவனால் அளிக்கப்படாததும், வேதாகமத்தில் இடம் பெறாததுமான அநேக பாரம்பரியங்களையும், வியாக்கியானங்களையும், பிரமாணங் களையும் நுழைத்தனர் என்பதே. ஒரு சாதாரண மனிதன், தேவனுடைய பிரமாணமும் மனிதனுடைய கற்பனைகளும் கலக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் வளர்க்கப்பட்டு, எவ்வித கேள்வியுமின்றி அதை தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக் கொண்டான். இந்த வெதுவெதுப்பான காரியங்களை பிரகடனம் செய்தவர்கள், ஆடம் பரமான, வெளிப்படையாய்ப் பேசின, நியாயமற்ற, உயர்குலத் தைச் சேர்ந்த மதகுருக்களான வேதபாரகரும் பரிசேயருமே. அவர்களுடைய குற்றத்தை பொது ஜனங்கள் காணவில்லை யென்றாலும், இயேசுவின் பார்வையில் அது முதன்மையான தாயிருந்தது. தேவனுடைய மாறாத வார்த்தையை அவர்கள் மாற்றி அமைத்து, அவர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களுக்கு செவி கொடுத்து அவர்களை நம்பினவர்களுக்கும் பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப் போட்டதாக அவர்கள் மேல் அவர் குற்றஞ்சாட்டினார் (மத் 23:13).

வில்லியம் பிரன்ஹாம் காலடி எடுத்து வைத்த புறஜாதி. சபையும் அதே விதமான பரிசுத்தமற்ற கலப்பிற்குள் சென்றிருந்தது. அவர்களிடம் தேவனுடைய வார்த்தை இருந்தது, அவர் களிடம் வேதாகமம் இருந்தது. அந்த வேதாகமத்திலிருந்துதான் போதகர்களும் தங்கள் பிரசங்கத்துக்கான பொருளை தேர்ந்தெடுத்தனர். ஆனால் ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், ஜனங்கள் வேதாவாக்கியங்களின் அதிகாரத்தை (authority) குறித்தும், பிழையற்ற தன்மையைக் குறித்தும் ஒரு தளர்ச்சியான மனப்பான்மையைக் கொண்டிருந்தனர். வேதத்தில் காணப்படும் பெரிய உபதேசங்களுக்கும், சிறிய உபதேசங்களுக்கும்



தாங்களே அர்த்தமுண்டாக்கி, அவர்களுடைய ஸ்தாபனங்கள் வேதாமகப் பிரச்சினைகளுக்கு அளித்த விளக்கத்தின் பேரில் முற்றிலும் நம்பிக்கை வைத்திருந்தனர். இதன் விளைவாக. கி.பி. நான்காம் நூற்றாண்டு முதற்கொண்டு, ஒவ்வொரு சபையிலும் அதனதன் கருத்துக்கள், பாரம்பரியங்கள், தவறான விளக்கங்கள் போன்றவை ஊடுருவி அதனுடன் பிணைந்தன. இந்த விஷயத்தில் எந்த ஒரு சபையும் குற்றமற்றதல்ல. எந்த ஒரு சபைக்கும், அது செய்த குற்றத்துக்காக மனந்திரும்பும் மனப்பான்மை இல்லை. ஆதலால், இயேசுவைப் பின்பற்றினவர்கள் எவ்வாறு தாங்கள் நேசித்த யூதமார்க்கத்தினிடம் விடைபெற்று அதனின்று வெளியே வந்தனரோ, அது போன்று தனிப்பட்ட நபர் ஒவ்வொருவரும் மனந்திரும்ப வேண்டுமானால், மனிதனால் உண்டாக்கப்பட்ட முறைமைகளை விட்டு வெளியே வரவேண்டியதாயிருந்தது.

கர்த்தருடைய வருகையின் நேரத்தில், சுவிசேஷத்தின் உண்மையான சத்துருவாக விளங்குவது ஒரு பெரிய உலக சபை என்று வெளிப்படுத்தல் 17,18 அதிகாரங்கள் உரைக்கின்றன. இந்த சபை மகா வேசி என்றும் பாபிலோன் இரகசியம் என்றும் வெளிப்படுத்தல் 17ல் அழைக்கப்படுகின்றது. அவளும் அவளுடைய வேசி குமாரத்திகளும் உலகெங்கும் பரவியுள்ள ஒரு முறைமையை உண்டாக்கிக் கொண்டு அரசியலையும், மார்க்கத்தையும், வாணிபத்தையும் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுள்ளனர். தன் தாய் சபையைப் போலவே தேவனுடைய வார்த்தைக்கு மேலாக தன் சொந்த வார்த்தையை உயர்த்தி, அதை ஆக்கிரமிக்கத் தைரியம் கொண்ட மனிதனால் உண்டாக்கப்பட்ட ஒவ்வொரு ஸ்தாபனமும் இதில் முடிவடையும். ரோமாபுரியும் அவளுடைய பிராடெஸ்டெண்டு ஸ்தாபனக் குமாரத்திகளும் கொண்டுள்ள தற்காலிக பிரகாசம் (splendour) மிகவும் சிறந்ததாக இருக்கும். ஆனால் உண்மையான மணவாட்டியோ, அவளுடைய வார்த்தை மணவாளனுடன் ஒன்றாக இணைவதற்கு முன்பு அதைவிட்டு வெளியே வரவேண்டியவளாயிருக்கிறாள்.

வில்லியம் பிரன்ஹாம் கற்பித்த மூன்று உபதேசங்களை தேர்ந்தெடுத்து இங்கு அளித்துள்ளேன், வார்த்தையை திரும்ப அளிக்கும் ஊழியத்தை தேவன் ஏன் அபிஷேகிக்க வேண்டியதாயிருந்தது என்பதை இவை விவரிக்கும்.

### நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்? (அப் 19:3)

தெளித்தல், குழந்தை ஞானஸ்நானம் வேத ஆதாரமில்லாதது என்பது தெளிவாயுள்ளது. ஆனால் இதைக் காட்டிலும் அதிகம் வியாபித்துள்ள ஒரு தவறுண்டு. அது அநேக நூற்றாண்டுகளாக, தடுத்து நிறுத்தப்படாமல் கையாளப்பட்டு வருகின்றது. கிறிஸ்தவ சபைகள் பெரும்பாலோர் பிதா, குமரான், பரிசுத்த ஆவி என்னும் பட்டங்களை உபயோகித்து ஞானஸ்நானம் கொடுத்து, இயேசு மத்தேயு 28:19ல் அளித்த கட்டளைக்கு கீழ்ப்படிகிறதாக எண்ணியுள்ளனர். ஒரு குமாரன் பிறப்பார் என்றும், அவருக்கு மகிமையான நாமம் ஒன்றிருக்கும்